# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

நவம்பர் 2009 ஜீவியம் 15 மலர் 7

இம்மாத மலரில்....

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 3 |
| லைப் டிவைன் | 4 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 10 |
| நம்ப முடியாத உண்மைகள் | 18 |
| அஜெண்டா | 24 |
| அன்பர் கடிதம் | 27 |
| இரகஸ்யத்தின் ஜீவன் | 28 |
| லைப் டிவைன் - கருத்து | 32 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 34 |
| சாவித்ரி | 41 |
| மனிதனும் மிருகமும் | 43 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 60 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**அகத்தின் இருள் நமக்குத் தெரியும் நேரம் அன்னைக்கு உண்மையான நேரம்.**

**தன்னையே அளிக்க மனிதனைத் தேடும் அன்னையிடம் நாம் எதைஎதையோ கேட்கிறோம்.**

**கேட்டால் கேட்டனவெல்லாம் பெறலாம். கேட்க முடியவில்லைஎனில் நினைக்காதவற்றை எல்லாம் பெறலாம்.**

**எண்ணத்தை அழிக்காத அழைப்பு மனத்தைக் கடக்கவில்லை.**

## இம்மாதச் செய்தி

**நினைவு எழும்பொழுதெல்லாம்**

**சமர்ப்பணமாகும் வாய்ப்பு**

**பலிக்கத் தவறுவதில்லை.**



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

116. *நற்பண்பு மனத்தின் அணிகலன்.*

✡ **ஞானம் சத்தியத்தால் பண்பாகிறது.**

117. *நண்பனைப் பகைவனாக்காதே.*

✡ **பகைவனில் நண்பரை உருவாக்கும் சமர்ப்பணம்.**

118. *நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் பயன்படும்.*

✡ **அன்பர் பெறும் அருள் அனைவரும் பெறும் வசதி.**

119. *நெருப்பில்லாமல் புகை வாராது.*

✡ **நாம் இடம் தாராமல் நமக்குத் தீங்கு வாராது.**

120. *தீதும் நன்றும் பிறர் தர வாரா.*

✡ **அகமே புறம்.**

*தொடரும்....*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தானே ஏற்றுக்கொண்ட உயர்வைவிட தானுயர்ந்தவன் என முடிவு செய்வது, ஆராய்ச்சியின் பலன். அது தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையில் அமைந்த கர்வம்.

***கர்வம் தன்னை தானறிந்ததைவிட உயர்வாக்கிக்கொள்ளும்.***

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIX. Life

People will say this is not life. Page No.177
We mean a particular result of universal force. Para No.8
We are familiar with that.
It manifests only in the animal and the plant.
It does not manifest in the metal, the stone, and the gas.
It operates in the animal cell.
But, it does not operate in the pure physical atom.
We must be sure of our definition of life.
Let us examine in what precisely consists this particular result.

It is a play of Force which we call life.
It differs from the other result in inanimate things.
We call it not-life.
On earth there are three realms of the play of Force.
One is the animal kingdom.
It is an old classification.
Man belongs to it.
Next is the vegetable kingdom.
The last is the mere material void of life.



## 19. வாழ்வு

இது வாழ்வில்லைஎனப் பலரும் கூறலாம்.
வாழ்வு பிரபஞ்ச சக்தியின் ஒரு செயல்.
நாம் அதை அறிவோம்.
அது விலங்கிலும், தாவரத்திலும் வெளிப்படும்.
உலோகம், கல், வாயுவில் அது வெளிப்படுவதில்லை.
இது விலங்கின் செல்லில் வேலை செய்கிறது.
தூய ஜடத்தின் செல்லில் அது வேலை செய்வதில்லை.
வாழ்வுஎனில் என்னஎன்ற விளக்கம் தேவை.
இந்தக் குறிப்பிட்ட பலன் வருவது என்னஎன்று நாம் தெளிவாக ஆராய்வோம்.
இது சக்தியின் லீலை. நாம் அதை வாழ்வென்போம்.
உயிரற்றவற்றுள் அது தரும் பலன் வேறு.
நாம் அதை வாழ்வென்பதில்லை.
புவியில் மூன்று லோகங்கள் உள. அவை லீலையின் அம்சங்கள்.
விலங்கு வாழ்வு அவற்றுள் ஒன்று.
இது பழைய சாத்திரம்.
மனிதன் விலங்கினத்தைச் சார்ந்தவன்.
அடுத்தது தாவரம்.
முடிவானது ஜீவனற்ற ஜட உலகம்.

It is our pretense.
There is life in us.
There is life in the plant.
How does life differ here?
There is life.
There is not-life.
It is the world of the metal and the mineral kingdom.
It is the old phraseology.
There is the new chemical kingdom.
Science has discovered all these.

Animal life is the life we speak of. Page No.177
It moves, breathes, eats, feels, desires.
Sometime we speak of plants.
It is a metaphor.
It is not so much a reality to us.
It was considered as a material process.
It was not considered as a biological phenomenon.
We have associated life with breathing.
It is breath of life for us.
It is there in every language of life.
The formula is true.
We can change our conception as to Breath of Life.
Such a change validates the formula.
Locomotion, eating, breathing are signs of life.

Spontaneous motion is another sign.
They are not life, they are processes of life.
They are means for generation of energy.
Or, they release that stimulating energy.
It is done constantly.



இதுவே நாம் உலகை ஏற்கும் பாணி.
நமக்கு உயிருண்டு.
தாவரத்திற்கும் உயிருண்டு.
இரண்டிலும் உயிர் எப்படி வேறுபடுகிறது?
வாழ்வுஎன்பது ஒன்று.
உயிரற்றவைஎன்பன அடுத்த வகை.
உலோகமும், கனிப்பொருளும் சேர்ந்த உலகம்.
இது பழைய பாஷை.
புதியதாக ரஸாயன உலகம் வந்துள்ளது.
விஞ்ஞானம் இவற்றைக் கண்டுபிடித்துள்ளது.

நாம் வாழ்வுஎனக் கூறுவது விலங்கு வாழ்வு.
அது ஊரும், மூச்சு விடும், சாப்பிடும், உணரும், ஆசைப்படும்.
நாம் தாவரத்தை அறிவோம்.
இது ஓர் உருவகம்.
இதற்கு நம்மைப் பொருத்தவரை அர்த்தமில்லை.
தாவரத்தை ஜடமாகக் கருதுகின்றனர்.
தாவரம் உயிருள்ளதாகக் கருதப்படவில்லை.
உயிருள்ளதுஎனில் மூச்சுவிடும்என நாம் அறிகிறோம்.
வாழ்வின் மூச்சுஎன்பது மொழியின் உருவகம்.
எல்லா மொழிகளிலும் இச்சொல்லுண்டு.
இது உண்மையான சூத்திரம்.
இந்த சூத்திரத்தை நாம் வேறு வகையாக அறியலாம்.
அப்படி நம் மனம் மாறினால் சூத்திரம் பிடிபடும்.
நடப்பது, சாப்பிடுவது, மூச்சு விடுவது ஆகியவை உயிருடனிருப்பதற்கு அடையாளம்.
நினைத்தவுடன் நடப்பதும் அப்படியே.
இது உயிரன்று, உயிர் செயல்படும் வகை.
சக்தியை உண்டுபண்ணும் வழிகள் இவை.
உற்சாகமூட்டும் சக்தியை அவை வெளியிடுகின்றன.
இது தொடர்ந்து நடக்கிறது.

This energy is our vitality.
It is a process of two functions.
They are disintegration and renewal.
Our existence is substantial.
They support our existence.
They are not the only means of maintaining them.
There are other ways too.
Our sustenance and respiration are our ways.
These are the processes of our vitality.
Breathing is now deemed necessary.
Or, we can say was deemed necessary.
Beating of the heart too was so considered.
They can be temporarily suspended.
Still, human life can remain in the body.
It can remain in full consciousness.
It is a proved fact.
New evidence of phenomena has now come.
We deny any conscious reaction to the plant.
It is now shown it has a physical life.
It is identical with our own.
It is essentially organised as our own life.
It is different apparently in organisation.
This may be proved true.
Then we will have to make a clean sweep of the past.
It is an old facile, false conception.
They pertain to the symptoms.
We must get beyond the symptoms.
The symptoms are externalities.
We must reach the root of the matter.

*Contd…*

❀ ❀ ❀



இந்த சக்தியே நம் மூச்சு.
இது இரு வகையானது.
ஒன்று அழிவது, அடுத்தது புதுப்பிப்பது.
நம் வாழ்வு திறனுடையது.
இவை நம் வாழ்வுக்கு ஆதரவு.
வாழ்வை நடத்த இவை மட்டுமே வழிகளில்லை.
இதர வழிகளுண்டு.
நம் உணவும், மூச்சும் நாமறிந்த வழிகள்.
அவை நம் உயிர் வாழும் முறைகள்.
மூச்சு அவசியம்என நாம் கருதுகிறோம்.
நாம் கருதினோம்எனவும் கூறலாம்.
இதயத்துடிப்பும் அப்படியே கருதப்பட்டது.
அவற்றைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.
இருந்தாலும், உடலில் உயிரிருக்கும்.
உயிர் ஜீவனுடனிருக்கும்.
இதை நிரூபித்துவிட்டனர்.
புதிய விவரங்கள் வருகின்றன.
தாவரத்திற்கு உணர்ச்சியில்லை என்கிறோம்.
தாவரத்திற்கு உயிருண்டுஎன இப்பொழுது நிரூபிக்கப்பட்டது.
அது நம் உயிர் போன்றதே.
நம் வாழ்வு போலவே அது அமைந்துள்ளது.
பார்வைக்கு அதன் அமைப்பு மாறித் தோன்றுகிறது.
இதையும் நிரூபிக்கலாம்.
அப்படியானால், நாம் பழைய நிலையை அடியோடு கைவிடவேண்டும்.
அது ஜீவனற்ற பொய்.
அவை புறத்தோற்றம்.
நாம் தோற்றத்தைக் கடக்க வேண்டும்.
அடையாளமானவை, வெளித்தோற்றம்.
நாம் பிரச்சினையின் மூலத்தை அடைய வேண்டும்.

*தொடரும்....*

❀ ❀ ❀

# அன்பு அமிர்தமாகி,
# அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்

❀ *The Life Divine* தடைகளை உடைக்கும்.

அது அறிவுக்குரிய தடை.

மனத்திற்குரிய தடை அறிவுக்குரிய தடையைவிட மாறியது.

கண்ணெதிரேயிருப்பது மனத்திற்குரிய தடை.

50 முறை தவறிய வேலையை மீண்டும் அதே போல் செய்வது உணர்வுக்குரிய தடை.

உடலுக்குரிய தடையை உடைத்தால்

1) எந்த வியாதியும் அதனால் குணமாகும்.

2) எந்த லெவல் level அதிர்ஷ்டத்தையும் உற்பத்தி செய்யலாம்.

❀ 8 தலைகீழ் மாற்றங்கள் இதைப் புரிந்துகொள்ள உதவும்.

இதை அன்றாடம் காணலாம்.

ஒரு செயலைத் தலைகீழே மாற்றிப் பலனைக் காணலாம்.

எவ்வளவுக்கெவ்வளவு செயல் சிறியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு மாற்றுவது சிரமம்.

❀ நல்லதை ஏற்கும்பொழுது 3 நிலைகளில் ஏற்கிறோம்.

1) புரியாமல் மூடநம்பிக்கையால் ஏற்கிறோம்.

2) புரிந்து ஏற்கிறோம்.

3) புரிந்தபின் புரிந்தவற்றை விலக்கி பகவான் சொல்வதை ஏற்கிறோம் - இது பெரியது.

அதேபோல் மற்றவர் சொல்வதை ஏற்பது பெரியது.

சிறியவர் சொல்வதை ஏற்பது அதனினும் பெரியது.



அர்த்தமற்றவர் சொல்வது அடுத்தது.

எதிரி சொல்வது அதற்கடுத்தது.

வாய்ச்சொல் - வாழ்க்கை சொல்வது.

நம் மனத்திலுள்ளதற்கு பொருத்தமான வாய்ச்சொல் அன்னை வாழ்வுமூலம் பேசுவது.

❀ நாம் திட்டாமலிருப்பது ஓரளவு முடியும்.

திட்டினால் திருப்பித் திட்டாமலிருக்க முடியாது.

100 முறை பொறுத்து 1 முறை பதில் சொன்னால் பொறுமை வீண் போகும்.

யார் ஆரம்பித்தது என்பதன்று.

எந்த நிலையிலும், நாம் பதிலுக்குத் திட்டுவது மனித குணம்.

மனிதன் போய் தெய்வம் வர வேண்டும்.

1000 நடந்தாலும் ஆழமாக நினைத்து மாறினால் அத்தனையும் ஆற்றுவெள்ளம் காலடிச் சுவட்டை அழிப்பது போலழிக்கும்.

## ✡ உஷாராக முன்கூட்டி பதில் பேசுவது

❀ நம்மீது தப்பு வரக் கூடாதுஎன உஷாராக இருப்பது.

இது உள்ளவரை தரித்திரம் போகாது, அதிர்ஷ்டம் வாராது.

தரித்திரம் இதனால் உயிர் பெறும்.

இப்பழக்கம் நாமுள்ள நிலையில் நம்மை நிலைநிறுத்தும்.

இதற்கு எது எதிரானது?

எவர் சொல்வதும், எது சொல்வதும், நமக்கில்லைஎன்ற போக்கு.

அது உண்மையானால், அப்படிப்பட்ட பேச்சு அதன்பிறகு காதில் விழாது.

**பொய் சொல்லும் சந்தர்ப்பம் தரமாட்டேன்என அன்னை கூறுவது இதுவே.**

நாமே விரும்பிப் போகாத குறைக்கு அன்னை இடம் வைப்பதில்லை.

நாமே விரும்பிப் போகும் நிறையை அன்னை பூர்த்தி செய்வார்.

அதையும் தேடிப் போகாமலிருப்பது நல்லது.

நாம் உட்படும் நிலையில் உள்ளது பூர்த்தியாவது மனத்துடையது (psychological).

குறையும், நிறையும் (social) ஊருக்குரியது.

மனம் (psychological) என்பது social நிலையைவிட உயர்ந்தது.

சமூகம் (social) என்பது உயிர் vital. மனம் psychological என்பது அறிவு mental.

ஒரு பெரிய ஆங்கிலக் கதாசிரியர் "பெறுவது கொடுப்பதைவிடச் சிரமம்" என்கிறார்.

பிறரைத் திருப்தி செய்யப் பெறுவது பெரிய மனம்.

மறுப்பது அவரைப் புண்படுத்தும்.

அன்னை தரும் அருளை நன்றியுடன் பெறுவது கடினம்.

பெற முடிந்தால் பெறற்கரியது பெறலாம்.

பெறும் மனம் பெரிய மனம்.

மனம் வளரும்படி நினைப்பது வாழ்வு உயர்வது.

நம்முள் சைத்தியப்புருஷனுண்டு. (The psychic is there in you).

அன்னை இசை அதை வெளியில் கொண்டு வரும். (Mother's music brings it out).

அது உண்மை.

நன்றி சைத்தியப்புருஷனை புல்லரிப்பாகக் காட்டும். (Gratitude brings it out by a thrill).

புளகாங்கிதம் புனர்ஜென்மம்.

புனர்ஜென்மம் வாழ்வு வளர்வது.

உடல் புளகாங்கிதமடைந்தால் உயிர் அதிக நாள் வாழும்; தெம்பு உயரும்.



## ✡ சத்தியம்

❀ இருப்பது சத்தியம்.

இல்லாதது பொய்.

பொய்யை உறுதியாய் நம்புவது தரித்திரம்.

மூடநம்பிக்கையை முடிவாக நம்புவது தரித்திரம் வளர்வது.

தைரியம் அதை வளர்ப்பது தரித்திரத்தின் வலிமை.

மூடநம்பிக்கை (superstition) தரித்திரம்.

இல்லாததை கற்பித்து நம்புவது சூட்சுமத்தில் தரித்திரத்திற்கு அழைப்பு அனுப்புவது.

நம் நண்பர் அதுபோன்ற பெருமையுடையவர்.

அடுத்த வீட்டுப் பையன் நண்பரை மிஞ்சியவன்.

அது தரித்திரத்தின் உருவகம் (It is a personification).

| | | |
|---|---|---|
| அதிர்ஷ்டம் | X | தரித்திரம் |
| மெய் | X | பொய் |
| பெருந்தன்மை | X | அல்பம் |
| திட்டமுடியாத மனநிலை | X | கொட்டினால் தேள் |
| விட்டுக் கொடுப்பது | X | பிடியை விடாதது சாமர்த்தியம் |

சற்று சம்பாதித்தவன் சாமர்த்தியமானால் அவன் சாமர்த்தியம் அவனுக்கு தரித்திரமாகும். அதற்குமேல் போக முடியாது.

| | | |
|---|---|---|
| ரிஸ்க் (risk) எடுப்பது | — | ரிஸ்க்கை விலக்குவது (avoiding risk) |
| விஸ்வாசம் | — | துரோகம் |
| வலிமை (strength) | — | (weakness) எளிமை |
| பொறுமை | — | அவசரம் |
| கேட்க முடியாத மனம் | — | கேட்பது* |

* கிடைக்காதுஎனத் தெரிந்து கேட்காமலிருப்பது தரித்திரத்தின் சாமர்த்தியம்.

| | | |
|---|---|---|
| நம்மை மற்றவருக்குக் கட்டுப்படுத்துவது | — | பிறர் நமக்குக் கட்டுப்பட்டவரென நினைப்பது |
| வதந்தியில் ஆசை இல்லாதது (No interest in gossiping) | — | ஒட்டுக் கேட்பது, வம்பு பேசுவது |
| உழைப்பு* | — | சோம்பேறி |
| ஞாபக சக்தி | — | ஞாபக மறதி |
| நினைவே வாராதது | — | மறந்து அறியாதது |
| இனிய சொல் (pleasing words) | — | சுடு சொல் (offending words) |
| கோள் சொல்ல முடியாதது | — | கோள் சொல்வது |

## ✡ கெட்டவரிடம் - மட்டமானவரிடம் - நல்ல பேர் வாங்குவது கெட்ட பெயர்

"நாம் ஒரு societyயில் இருக்கிறோம்". அதனால் அத்துடன் ஒத்துப் போக வேண்டும்என்பவருக்கு அன்னையிடம் வேலையில்லை, வேலையேயில்லை. சமூகம் (society) பொய் மயமானது, சமயத்திற்குத் தகுந்தாற்போல் மாறுவது, சந்தர்ப்பவாதம் opportunist. அது அருவெறுப்பானது. அது முக்கியம்என்பவர் சமூகத்திற்கு (society) உகந்தவர். அது ஏற்கக்கூடிய எண்ணமில்லை.

— சொஸைட்டி முக்கியமில்லை,
உண்மை முக்கியம்.

— சமூகம் முக்கியமில்லை,
நல்லது முக்கியம்.

* தரித்திரம் உழைத்தால் தரித்திரம் நிலைக்கும்.



— நாலு பேர் முக்கியமில்லை,
நியாயம் முக்கியம்.

— எவரும் முக்கியமில்லை,
அன்னை (Mother) முக்கியம்.

— சத்யகர்மாஎன்று ஒரு வேத ரிஷியுண்டு.
சிறு வயதில் அவர் ஒரு குருவை நாடினார்.
"உன் கோத்ரம் என்ன?" என்று குரு கேட்டார்.
சிறுவன் தாயாரைப் போய்க் கேட்டான்.
அவள் "நான் பலர் வீட்டில் வேலை செய்தேன்.
நீ யாருக்குத் தரித்தாய்என நானறியேன்" என்றார்.
சிஷ்யன் அதை, குருவிடம் கூறினான்.
அவன் சத்தியத்தை மெச்சினார்.
கோத்ரம் முக்கியமில்லை.
சத்தியம் முக்கியம்என்றார்.
அவன் சத்யகர்மா ஆனான்.
உலகப்புகழ் வேத ரிஷியானான்.
5000 ஆண்டிற்குப் பின் நாம் அவன் பெயரைக் கூறுகிறோம்.
சத்தியம் நிலைக்கும்.
சத் அகம், புறம்என்ப் பிரிந்தால்
அகம் ஆன்மாவாகும்.
புறம் சத்தியமாகும்.
சத்தின் புறமான சத்தியம் நமக்கு அகம்.

## ✡ சூளையில் வேகாத மண்பாண்டம் (Unformed personality)

❀ பிறரிடம் பேசுவது, பழகுவது (manners) பழக்கம்.
இது புறம், வாய்அளவில் உள்ளது, உதட்டளவில் உள்ளது.

இது அழகாக உள்ள எத்தனை பேர் நமக்குத் தெரியும்?

நாம் தேறுவோமா?

உதடு உள்ளே உண்மையாவது (behaviour) நடத்தை.

பழக்கத்திற்கு (manners) உயிரளிப்பது (behaviour) நடத்தை.

நடத்தை (behaviour) உண்மையானால் அது அகம் அழகாக இருப்பது.

நாமே நம்மை அப்படிக் கருத முடியுமா?

அது அழகாக இருந்தால், அன்பாக இருக்குமா? அர்த்தமுள்ளதாக இருக்குமா? நமக்கு ஆனந்தம் தருமா? பிறருக்கு ஆனந்தம் தருமா? தந்தால் அது *மேல் மனத்தின் மேற்புறம்.*

நடத்தை (behaviour) மேலே, சுபாவம் (character) உள்ளே.

சுபாவம் (character) மேல் மனத்தின் ஆழத்திற்குரியது.

அதை சுபாவம்என்று கூறுகிறோம்.

அதை மாற்ற முடியாது.

அது ஆழ்ந்த பகுதி. பிரியம், இனிமை, உண்மை, கோபம், மட்டம், கயமை, திருடு, சூது, வாது சுபாவமாகும்.

பர்சனாலிட்டி (personality) என்பது அதையும் கடந்தது.

சுபாவத்தின் (character) சாரம் (essence) பர்சனாலிட்டி personality.

சுபாவம் (character) நிலையானது, மாறாது, மாற முடியாது.

பர்சனாலிட்டி (personality) அதன் சாரம் (essence).

சுபாவத்தின் திறன் அது உருவான இடத்தில் மட்டும் பலிக்கும்.

பர்சனாலிட்டி (personality) அதன் சாரத்தை எல்லா இடங்களுக்கும் கொண்டுபோகும்.

அந்த பர்சனாலிட்டி(personality)க்கு நமது முத்திரையிருப்பது (individuality) தனித்தன்மை.

அது உடல், உயிர், மனம், ஆத்மா (physical, vital, mental, spiritual) லெவல்களில் உண்டு.



அமெரிக்கர்கட்கு ஜடமான தனித்தன்மை (physical individuality) உண்டு.

அது உலகையாள்கிறது.

இந்தியர்கட்கு ஆன்மீகத் தனித்தன்மை(spiritual individuality)க்குரிய வித்து (potential) உண்டு.

ஆனால் ஜடத்திலும் தனித்தன்மை (physical individuality) இல்லை.

அன்பர்கட்கு ஆன்மாவைக் (spirit) கடந்த (Mother's Individuality) அன்னையின் தனித்தன்மை உண்டு. அது சத்தியஜீவிய ஜீவாத்மா (Supramental Individuality).

நாமறிந்த சிலருக்கு ஜடமான தனித்தன்மையுமில்லை.

அவர்கள் வேகாத மண்பாண்டம்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அடக்க முடியாத ஆசையைத் தன்னையறியும் சக்தியாக மாற்றுவது, அதற்குரிய வழுவில்லாத தீர்மானம் திருவுருமாற்றமாகும்.

***திருவுருமாற்றம் அடங்காததை, தன்னையறியச் செய்யும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அந்நிலையில் முனைந்து முன்கையெடுப்பது அகந்தை அழிந்தால்தான் முடியும். அது அன்னை நம்மில் முன்கை எடுப்பதாகும்.

# நம்ப முடியாத உண்மைகள்

N. அசோகன்

1) தெய்வங்களிடம் இல்லாத சைத்தியப்புருஷன் மனிதனிடம் இருப்பதால் மனிதன் தெய்வங்களைவிட உண்மையில் உயர்ந்தவன்.

2) சந்தேகம்என்பது சாதாரண மனிதர்களுக்குமட்டும் வருவதில்லை. பகவான் சமாதி அடைந்தபிறகு அவரால் சாதிக்க முடியாததை உங்களால்மட்டும் எப்படி சாதிக்க முடியும்என்று இடைவிடாமல் இரவு, பகலாக தீய சக்திகள் அன்னைக்கு சந்தேகத்தை எழுப்பிக் கொண்டிருந்ததாக அவரே சொல்லி இருக்கிறார்.

3) பூவுலகில் நாம் கண்ட அன்னையினுடைய அழைப்பை ஏற்று யுனிவர்சல் நிலையில் இருக்கின்ற அன்னையும் பூமிக்கு வந்தார். ஆனால் மானிடச் சமூகம் தனக்குச் சரியான வரவேற்பை வழங்கவில்லைஎன்று வந்தவர் மீண்டும் தன்னிடத்திற்கே போய்விட்டார்.

4) அன்னையினுடைய பெற்றோர்கள் ஜடம்தான் நிஜமென்று பேசும் நாத்திகவாதிகளாக இருந்தார்கள். இருந்தாலும் அன்னையினுடைய தகப்பனாரிடம் physical levelஇல் ஓர் அசாத்தியமான சமநிலை இருந்தது. அன்னை மேற்கொண்ட பூரண யோகத்திற்கு அத்தகைய சமநிலை மிகவும் உதவுமென்பதால் அவரை அன்னை தகப்பனாராகத் தேர்ந்தெடுத்ததாகச் சொல்லி இருக்கின்றார்.

5) அன்னையின் கருத்துப்படி ஆதிசங்கரர், சுவாமி விவேகானந்தர், இருவருமே சிவபெருமானின் அம்சங்களாகும். ஆனால் சங்கரர் மாயாவாதம் பேசினார். அடுத்தவர், வாழ்க்கை நிஜமானது. அதில் நாம் சாதிக்க வேண்டும்என்று பேசினார்.

6) அன்னையினுடைய பெண்நண்பர் மேடம் அலெக்சாண்டரா டேவிட் நீல் என்பவர் ஓர் ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்தபொழுது புத்த பகவான் அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்ததை அன்னை தம் கண்களால் கண்டார்.

7) நாம் பூவுலகில் தீமையின் கை ஓங்கி இருப்பதாக நினைத்தாலும், உண்மையில் தீய சக்திகளைவிட உண்மையைச் சார்ந்த சக்திகளின் கைதான் ஓங்கி இருப்பதாக அன்னை கூறி இருக்கிறார்.



8) 1962ஆம் ஆண்டு சீன இராணுவம் இந்தியாவிற்குள் படை எடுத்து வந்தபொழுது அன்னையின் சக்திக்குக் கட்டுப்பட்டு பின் வாங்கினார்கள். அப்பொழுது இந்திய அரசாங்கத்தைவிட சீன இராணுவம்தான் தனக்குச் சரியான response வழங்கியதாக அன்னை கூறி இருக்கிறார்.

9) ஸ்ரீ கர்மயோகி அவர்களின் கருத்துப்படி ஜட நிலையைவிட சூட்சும நிலை மிகவும் சக்தி வாய்ந்ததுஎன்று தெரிகிறது.

10) ஆன்மீக ஒளியின் பிரகாசத்திற்கு முன்னால் பகல் வெளிச்சம் இருட்டாகத் தெரியும்என்பது அன்னையின் கருத்து.

11) அன்னையின் கருத்துப்படி ஜடத்தாலான நம்முடைய உடம்பைவிட சத்தியஜீவிய உடம்பு மேலும் திடமானதாக இருக்கும்.

12) அன்னையின் கருத்துப்படி நம்முடைய ஜீவனின் நான்கு பாகங்களான ஆன்மா, அறிவு, உணர்வு, உடம்பு ஆகியவற்றில் உடம்புதான் மிகவும் சிறியதாகும்.

13) ஸ்ரீ அரவிந்தர் எந்தவிதச் சிந்தனையுமின்றி முழு மௌனத்திலிருந்து தான் The Life Divineஐ எழுதினார்என்று அன்னை தெரிவித்துள்ளார்.

14) கிருஷ்ணபகவான் ஸ்ரீ அரவிந்தரின் உடலில் இறங்கியபொழுது அக்காட்சியைக் காண அன்னை பரபரப்புடன் கீழே இறங்கி வந்தார். ஆனால் பகவானோ எதுவுமே நடக்காததுபோல் அமைதியாக எழுதிக் கொண்டிருந்தார்.

15) துர்க்கையை அன்னை சந்தித்தபொழுது தமக்குமேல் உயர்ந்த ஒரு பரம்பொருள் இருப்பதாகவே தமக்குத் தெரியவில்லைஎன்று அன்னையிடம் கூறியிருக்கிறார்.

16) Physical levelஇல் matterலிருந்து எனர்ஜி வருவதைத்தான் நாம் பார்க்கின்றோம். ஆனால் ஆன்மீகரீதியாக பார்க்கும்பொழுது எனர்ஜி முன்னதாகவும், matter அதற்கு அடுத்தபடியாகவும்தான் உருவாகியுள்ளன.

17) அன்னையின் அஜெண்டாவை எழுதிய சத்பிரேம் அவர்கள் ஆன்மீகத்தில் தாம் எதுவும் பெரிதாக சாதிக்கவில்லைஎன்று

வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் அன்னை தாம் சொல்லிய ஆன்மீக உண்மைகளை அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் சத்பிரேம் எழுதியதே ஒரு பெரிய ஆன்மீகச் சாதனை என்று அவருக்கு நினைவுபடுத்தினார்.

18) பெற்றோர்கள் பிள்ளைகளின் கண்ணெதிரே அடிக்கடி சண்டை போட்டாலும், பிள்ளைகள் தங்களுடைய திருமண வாழ்க்கை இப்படியில்லாமல் இன்பகரமாக இருக்கும்என்று நினைத்துக் கொள்கிறார்கள்.

19) நாம் புலன்களால் உலகை உணர்வதாக நினைக்கிறோம். ஆனால் உண்மையில் நம்முடைய அறிவுதான் நம்முடைய புலன்களின்மூலம் உலகை உணர்கிறது.

20) பிரச்சினையைப்பற்றி ஒரு நபர் எந்த அளவிற்குக் கவலைப்படுகின்றாரோ அந்த அளவுக்கு பிரச்சினை அவருக்கு அதிகமாகிவிடும். எந்த அளவுக்கு பிரச்சினையை மறக்கிறாரோ அந்த அளவுக்கு பிரச்சினையைத் தீர்ப்பது சுலபமாகிறது.

21) வரம்பற்றது தன்னைச் சுருக்கிக்கொள்ளும்பொழுது வரம்பிற்குட்பட்ட சிறியதாகிவிடுகிறது. இப்பொழுது சிறியதாக நம் கண்ணிற்குத் தெரிவது மீண்டும் விரிந்ததென்றால் வரம்பற்ற பெரியதாகி-விடுகிறது.

22) தன்னுடைய சைத்தியப்புருஷனுடன் தொடர்பு கொண்டிருப்பவர்களால் அடுத்தவர் சொல்லாமலேயே அவர்களுடைய எண்ணங்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

23) அழகுஎன்பதை நாம் ஒரு physical levelஇல் கண்களால் பார்க்கக்கூடிய ஒரு விஷயமாக நினைக்கிறோம். ஆனால் அழகினுடைய ஆன்மீக மூலத்தைப் பார்த்தோமென்றால் ஆனந்தம் நம்முடைய அறிவைத் தொடும்பொழுது நம் அறிவு ஆனந்தத்தை அழகாக உணர்கிறதுஎன்பதுதான் பகவான் அளிக்கும் விளக்கம்.

24) பகவானுடன் அன்னைக்கிருந்த 36 வருடத் தொடர்பில் ஒரு தடவைகூட அன்னை அவரை மறுத்துப் பேசியதில்லை, சவாலாகக் கேள்வி கேட்டதுமில்லை.

25) நம்முடைய அடிமனம்என்பது பல விஷயங்களில் நம்முடைய மேல் மனத்திற்கு நேரெதிராக இருக்கும்.



26) பணத்தைச் சேமித்து வைப்பதைவிட செலவு செய்யும்பொழுதுதான் அது அதிகம் வளர்கிறது.

27) அன்னையின் கண்ணோட்டத்தில் உண்மையான அன்பு எந்த பிரதி பலனையும் தேடாதுஎன்கிறார். பிரதிபலன் தேடுகின்ற எல்லா வகையான மானிட அன்பும் உண்மையான அன்பிற்குண்டான தகுதியை இழக்கின்றன.

28) எண்ணங்களுக்கு வடிவம் இல்லைஎன்றாலும் சூட்சும நிலையில் அவை உண்மையான விஷயங்கள்தாம். ஓர் இலக்கை நோக்கி அம்பை எய்வதுபோல் குறிப்பிட்ட காரியத்தைச் சாதிக்கும் வகையில் நம் எண்ணத்தையும் அத்திசையில் செலுத்த முடியும்.

29) ஆசைகளை பூர்த்திசெய்வதில் கிடைக்கும் இன்பத்தைவிட அவ்வாசைகளை முறியடித்து, அவற்றிலிருந்து விடுபடும்பொழுது கிடைக்கும் இன்பம் பெரியது.

30) நம்முடைய அறிவு உண்மையில் அறியாமையால் நிரம்பி இருக்கிறது. இப்பொழுதுதான் நம்முடைய அறிவு உண்மையான அறிவைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறது.

31) அன்னையின் கருத்துப்படி பார்த்தால் பிரபஞ்சம் ஒவ்வொரு நொடியும் தன்னுடைய எல்லா பாகங்களையும் புதுப்பித்துக் கொள்கிறது. ஆனால் நம்முடைய பார்வைக்கு இந்த மாற்றங்கள் தெரிவதில்லை. நாம் பிரபஞ்சம் அப்படியே இருப்பதுபோல் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

32) அன்னையின் பாதுகாப்பு தவறும் இடங்களிலெல்லாம் சம்பந்தப்பட்ட நபர் தாம் தெரிந்தோ, தெரியாமலோ அன்னையின் பாதுகாப்பிலிருந்து வெளியேறுகிறார்.

33) வருடங்கள் உருண்டு ஓடுவதால் நமக்கு வயதாவதைவிட நம்முடைய மனநிலை பழமையில் இறுகிப்போவதால்தான் முதுமை வேகமாக வருகிறது.

34) நாம் அகம், புறம்என்று பிரிவுப்படுத்திப் பேசினாலும் வாழ்க்கை இந்த வேறுபாடுகளைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. அகம், புறம்என்ற இவ்விரண்டையுமே வாழ்க்கை ஒரே நிலையில் வைத்துதான் பார்க்கிறது. அதாவது அகத்தின் பிரதிபலிப்பு புறத்தில்

தெரிவதால் வாழ்க்கைக்கு அகமும், புறமும் ஒன்றேஎன்று ஆகிவிடுகிறது.

35) உணர்ச்சிவசப்பட்டு செயல்படுகின்றவர்கள் பல வருடங்கள் கஷ்டப்பட்டுக் கற்றுக்கொள்கின்ற வாழ்க்கைப் பாடங்களை புத்தி கூர்மையுள்ளவன் ஒரு சில நிமிடங்களில் புரிந்துகொள்வான்.

36) பயம்என்பது மன உறுதி கெடுவதைக் குறிக்கும். நாம் ஒரு விஷயத்தை நினைத்து அதிகம் பயப்படும்பொழுது அந்த பயமே நெகட்டிவ் விருப்பம்போல் செயல்பட்டு அந்த விஷயத்தை நம்மை நோக்கி மேலும் வேகமாகக் கொண்டுவரும்.

37) தைரியமும் பிரச்சினைகளும் தலைகீழ் தொடர்புள்ளவை. நமக்கு ஒரு பிரச்சினை பெரிதாகத் தெரிகிறதென்றால் அந்த அளவிற்கு நம்முடைய தைரியம் குறைந்திருக்கிறதுஎன்று அர்த்தம். தைரியம் அதிகரிக்கிறதுஎன்றால் முன்பு பெரிதாகத் தெரிந்த அதே பிரச்சினை இப்பொழுது சிறியதாகத் தெரியும்.

38) ஜடப் பொருட்களை நாம் பிறருக்குக் கொடுத்தால், கொடுக்கும் அளவிற்கு அவை எண்ணிக்கையில் குறையும். ஆனால் அறிவு போன்ற சூட்சும விஷயங்களைப் பிறருக்குக் கொடுக்கும் அளவிற்கு வளரும்.

39) குருவிற்கு அருகிலேயே ஒருவர் இருக்கிறார்என்பதால் ஆன்மீக ரீதியாக அவரோடு நெருக்கமாக இருக்கிறார்என்று நாம் வைத்துக் கொள்ள முடியாது.

40) அன்னையின் கருத்துப்படி பார்த்தால் நமக்கு வருகின்ற நெருக்கடிகள்தாம் நாம் வாழ்க்கையில் வேகமாக முன்னேற உதவுகின்றன.

41) பாரதமாதா வெறுங்கற்பனை இல்லை. சூட்சும உலகில் அவர்கள் ஒரு ஜீவனாக உள்ளார்கள். அவர்கள் விரும்பினார்கள் என்றால், மானிட வடிவம் தாங்கி உலகில் பிறக்க முடியும்.

42) பிருந்தாவனத்தில் கிருஷ்ணபகவான் குழல் ஊதுவதும், இராதா அங்கே இருப்பதும், தெய்வ லோகத்தில் சரஸ்வதி வீணை வாசிப்பதும் வெறுங்கற்பனை இல்லை. சூட்சும உலகில் இந்நிகழ்ச்சிகள் உண்மையாகவே நடக்கின்றன.



43) யோகிகள் என்று சொன்னால் கோயில்களிலும், மடங்களிலும் இருக்கின்ற சாதுக்களையும், சாமியார்களையும்தான் நாம் நினைக்கிறோம். இவர்களைக் கருதாமல், உண்மையான யோகியை கருதினால், அவர் தத்துவஞானிகளுக்கும், கவிஞர்களுக்கும் மேலான பரிணாமநிலையில் இருப்பதாக ஸ்ரீ கர்மயோகி அவர்கள் கூறுகிறார்.

44) நம்முடைய ஜீவியநிலை எந்த அளவிற்கு உயர்கிறதோ அந்த அளவிற்கு அது மென்மையாகிவிடுகிறது. புதிதாக முளைக்கும் செடியை நசுங்காமல் காப்பாற்றுவதைப்போல் நாம் அதைக் காப்பாற்ற வேண்டும்.

45) பெரும்பாலான பிரச்சினைகளுக்குண்டான தீர்வு அந்தப் பிரச்சினைகளுக்கு உள்ளேயே இருக்கும்.

46) சிறியதற்குள் அடைப்பட்டிருக்கின்ற பெரியது விடுபடும்பொழுது பிறக்கின்ற எனர்ஜிக்கு உதாரணமாக அணுவைப் பிளக்கும்போது வெளிப்படும் எனர்ஜியைச் சொல்லலாம்.

47) முன்னோடிகளும், சீர்திருத்தவாதிகளும் சமூகத்தால் பைத்தியக்-காரர்களைப்போல் கொடுமைப்படுத்தப்படுவதால் அன்னை இவர்களை ஒளிமயமான பித்தர்கள்என்று வர்ணிக்கிறார்.

48) பிரம்மம் அசைவதில்லைஎன்று உபநிடதம் கூறுகிறது. ஆனால் அதே சமயத்தில் அது எப்பொழுதுமே நமக்கு எட்டாமல் முன்பே இருக்கிறதுஎனவும் சொல்கிறது.

49) உலகம் பலவிதமாகக் காட்சியளிப்பதாகவும், பிரம்மத்தில்தான் ஒருமைப்பாடு உள்ளதாகவும் நாம் சொல்கிறோம். ஆனால் பகவானுடைய கருத்துப்படி பிரம்மம் ஒருமைநிலை மற்றும் பன்மை நிலை ஆகிய இரண்டையும் தாண்டிய நிலையில்தான் இருக்கிறது. ஒருமை, பன்மைஎன்பன பிரம்மத்தையும், உலகத்தையும்பற்றி நமக்குத் தெரிந்த வர்ணனைகள்தானேயொழிய பிரம்மத்தைப்பற்றிய உண்மையான வர்ணனை ஆகாது.

50) மானிடச் சூழ்நிலையில் ஆண், பெண்ணைவிட அதிக சுறுசுறுப்பாக இயங்குகிறான். ஆனால் ஆன்மீக நிலையில் சக்திதான் ஈஸ்வரனைவிட அதிக இயக்கம் கொண்டதாகக் கூறப்படுகிறது.

❀ ❀ ❀

## Dissolution of physical ego – absence of reaction, memories are gone, difficulty of using 'I' – *Agenda 1968, Volume-9*

## உடலின் அகந்தை கரைகிறது - எரிச்சலில்லை, நினைவழிகிறது, 'நான்' எனக் கூற முடிவதில்லை

✡ பல மகான்கள் தம்மைக் குறிப்பிடும்பொழுது மூன்றாம் நபர்போலப் பேசுவார்கள். இது நம் மரபுக்குரிய செய்தி. *அகந்தையழிந்தபின் எழும் மனநிலையது.*

✡ நாம்என்பது புருஷன். நடைமுறையில் நம் சுயநலம் விஸ்வரூபமெடுத்து புருஷனை ஆக்கிரமித்து அகந்தையாகிறது.

நான் சொல்வதே சரிஎன்பவர் மனத்தால் அகந்தையை வலியுறுத்துபவர்.

தம் அநியாயத்தை நியாயம்எனக் கொள்பவர் உயிரின் அகந்தையை வெளிப்படுத்துகிறார்.

உடலின் அகந்தை நம் பொருள்களின் மீதுள்ள பாசம், பற்றாகும்.

❀ ஆன்மீகம் அகந்தைக்கெதிரானது.

என்றாலும் அகந்தையழியாமல் எல்லா ஆன்மீக சித்திகளும் பெற முடிவதால் அகந்தை அழிய வேண்டும்என்பது வலியுறுத்தப்படுவது இல்லை.

❀ பொய்யைக் கைவிடாமல் எல்லாப் பெரிய பட்டங்களையும் பெறலாம்.

அதனால் பொய் சரிஎன்றாகாது.

❀ பௌத்தம் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அகந்தைக்கு இடம் தருவதில்லை.

நிர்வாணம் அகந்தை அழிவது.



பகவத் கீதை அகந்தை அழிவதைப் பிரம்ம நிர்வாணம்எனக் கூறுகிறது.

பகவான் ஸ்ரீ அரவிந்தருடைய யோகத்தின் முதல் நிபந்தனை சரணாகதி. முடிவான சித்தி அகந்தை அழிவது. அகந்தையுள்ளவரை இந்த யோகத்தை ஆரம்பிக்க முடியாது.

❀ அறிவின் அகந்தையில்லாததற்கு அடையாளம், அடுத்தவர் கருத்தை ஏற்பது.

உணர்வின் அகந்தை அழிந்த அடையாளம், எவர் மீதும் வெறுப்பு ஏற்படாதது.

உடலின் அகந்தை அழிந்தால் எரிச்சல் எழாது.

நிஷ்டையில் துணி கிழிவதைப்போன்ற சப்தம் கேட்டால், உடலின் அகந்தை அழிகிறதுஎனப் பொருள்.

❀ அகந்தைஎன்பது எல்லை.

❀ உடலின் அகந்தைஎன்பது 'நான்என்பது இவ்வுடல்' என அறிவது.

❀ உலகில் உள்ளது ஓர் உடல். அதன் ஓர் அம்சம் என்னுடல் என்பது ஆன்மீக உண்மை.

பிரபஞ்சம் முழுவதும் அன்னையின் சூட்சுமஉடல் பரவியது. உடலுக்கு அகந்தையிருந்தால் அதுபோல் பரவ முடியாது.

❀ நமக்கு அழுக்கு, ஆபாசம் அருவெறுப்பை உற்பத்தி செய்கிறது. *அருவெறுப்பு உடலின் அகந்தையின் உணர்ச்சி. எல்லாப் பொருள்களும் பிரம்மம்என்ற ஆன்மீக உணர்ச்சிக்கு அருவெறுப்பில்லை.*

❀ நினைவுஎன்பது காலத்தை மனத்தில் செயல்படச் செய்கிறது.

நினைவு அழிந்தால் நாம் காலத்தைக் கடக்கிறோம்.

மனத்தையும் கடந்து வருகிறோம்.

அகந்தையின் அரங்கம் காலம், மனம்.

நினைவுள்ளவரை காலமும், மனமும் உண்டு.

நினைவழிந்தால், அவை கரைந்தனஎனப் பொருள்.

**அகந்தையின் முதல் தோற்றம் மனத்தில்.**

**அடுத்தது உயிரில்.**

**முடிவில் உடலில் அகந்தை குடி கொண்டுள்ளது.**

**நினைவு அழிந்தால் அகந்தை அழிந்ததைக் காட்டும்.**

**எரிச்சல்என்பது பழைய நிகழ்ச்சிகளின் உணர்வு.**

**நினைவும், எரிச்சலும் அழிந்தால், அகந்தை எல்லா நிலைகளிலும் அழிந்துவிட்டதுஎன அறியலாம்.**

**உடலின் அகந்தை அதிகமாகவுள்ளவர் நம் பொருளை எடுத்துப் பார்த்தால், அதைத் தொட்டவுடன் தம் பொருளாக நினைப்பார். திருப்பித் தரமாட்டார், வாங்குவது சிரமம்.**

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகத்திற்குத் தோற்றம் முக்கியமாகி, விஷயத்தையே கெடுத்துவிட்டது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரபலமான பீச்சில் கடலைக் கண்டால், கடல் அங்கு மட்டுமன்று, கடற்கரை எங்கும் காணலாம். சித்தி பெற்றவரிடம் இறைவனைக் காணலாம். ஆனால் இறைவன் அவரிடம் மட்டுமல்லன், அனைவரிடமும் இருக்கிறான்.

***எங்குமுள்ள பிரம்மம் மகானில்மட்டும் தெரிகிறது.***



## அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*
*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*
*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

அன்னையின் பொற்பாதங்களுக்குச் சமர்ப்பணம்.

தவத்திரு ஸ்ரீஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னையின் ஆசி வேண்டி நானும் என் பேரன் சித்தார்த் வெங்கடேஷும் எழுதிய கடிதத்திற்கு பதில் கிடைத்தது.

என் பேரன் சித்தார்த் வெங்கடேஷ் CBSE X[th] Board Examஇல் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டுமென்றும், cityயிலுள்ள famousஆன schoolஇல் (D.A.V.) seat கிடைக்க வேண்டுமென்றும் அன்னையிடம் மனமார பிரார்த்தித்துக் கொண்டேன். அதன்படியே அன்னையின் அருளால் 93% எடுத்து நாங்கள் எதிர்பாராத விதத்தில் ஒவ்வொரு பாடத்திலும் schoolஇல் 2வது வந்து, எங்கள் விருப்பப்படியே நாங்கள் நினைத்த schoolஇல் இப்பொழுது சேர்ந்துள்ளான். எல்லாம் அன்னையின் அருளாலும் உங்கள் ஆசியாலும்தான். எந்த கஷ்டமோ, துன்பமோ வந்தாலும் அன்னையை நினைத்து பிரார்த்தித்தால் உடன் தீர்த்து வைத்து அருள் புரிபவர் அன்னை. தாங்கள் தங்கள் கடிதத்தில் “பிரசாதம், ஆசி, அன்பு, பாதுகாப்பு, சந்தோஷம் ஆகியவற்றைத் தாங்கி வருவது” என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அது போலவே, எங்கள் குடும்பத்தில் அன்னையின் அருளால் எல்லாம் நடந்து வருகின்றன.

அன்னைக்கும், பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கும் கோடானு கோடி நன்றியை, பொற்பாதங்களில் உரித்தாக்குகிறேன். எனது பணிவான நன்றியையும், வணக்கத்தையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*-- N. சங்கரி, ஆதம்பாக்கம், சென்னை*

# இரகஸ்யத்தின் ஜீவன்

கர்மயோகி

- ✡ வாழ்வின் இரகஸ்யம் உழைப்பு.
- ✡ உழைப்பால் உயர்ந்த உத்தமர்என்பது சொல்.
- ✡ உடலால் வேலை செய்பவன் உழைப்பாளி.
- ✡ உழைப்பு தவறாது, தவறியதில்லை.
- ✡ உழைக்காமல் உயர்ந்தாரில்லை.
- ✡ உழைப்பின் இரகஸ்யம் உயிர்.
- ✡ உயிர்என்பது உணர்வு.
- ✡ உணர்வு உழைப்பைவிட உயர்ந்தது.
- ✡ உழைப்பால் பெறும் பலனை உணர்வால் பல மடங்கு அதிகம் பெறலாம்.
- ✡ உணர்வால் உழைப்பது ஊரைக் கூட்டிச் செயல்படுவது.
- ✡ ஊரைக் கூட்டுபவன் தலைவன்.
- ✡ ஒரு தலைவனுக்கு ஓராயிரம்பேர் வேலை செய்வார்கள்.
- ✡ நூறு உழைப்பாளிகள் சாதிப்பதைவிட உணர்வால் உழைக்கும் தலைவன் சாதிப்பான்.
- ✡ உணர்ச்சி தலைவனாக்கும்.
- ✡ உணர்ச்சி உயர்ந்தால், தலைவன் அரசனாவான்.
- ✡ அதுவும் உயர்ந்த நிலையில், அரசன் சக்ரவர்த்தியாவான்.
- ✡ உணர்வின் இரகஸ்யம் உயர்ந்தது, அது அறிவு.
- ✡ அறிவுள்ளவன் அறிஞன், விவேகி, மேதை.
- ✡ அறிஞனுக்கு அரசனும் கட்டுப்படுவான்.
- ✡ அரசன் செய்யும் வேலையை அறிவு வெளிப்படும்படிச் செய்ய அறிஞன் உதவுவான்.
- ✡ அறிவு அரசியலில் சிறந்தால் அர்த்தசாஸ்திரம் எழுதுவான்.
- ✡ அர்த்தசாஸ்திரம் அவன் பெயர் ஆயிரமாண்டு விளங்கச் செய்யும்.



- ✡ அறிவு உழைப்பில் வெளிப்படுவது உழைப்பு உயர்ந்த பலன் தருவது.
- ✡ அவனை இன்ஜினியர் என்கிறோம்.
- ✡ வெறும் உழைப்பாளி, என்றும் இன்ஜினியரை எட்ட முடியாது.
- ✡ அறிவின் மூலம் உண்டு. அது அறிவின் சாரமாகும்.
- ✡ அறிவின் சாரம் ஆன்மா.
- ✡ ஆன்மா அறிவில் வெளிப்பட்டால், அவன் மேதையாகிறான்.
- ✡ ஆன்மா உணர்வில் வெளிப்பட்டால், அவன் கவியாக மாறுவான்.
- ✡ ஆன்மா உழைப்பில் வெளிப்பட்டால், அவன் சிறந்த கலைஞன் ஆவான்.
- ✡ ஆன்மா மௌனத்தால் செயல்படும்.
- ✡ மௌனம் தவம்.
- ✡ தவம் நிறைந்த நெஞ்சம் உழைக்க முயன்றால் வில்வபத்ரம் தங்கமாகும்.

*இரகஸ்யத்திற்கு ஜீவன் உண்டு.*

*அந்த ஜீவனுக்கும் இரகஸ்யம் உண்டு.*

*அது இரகஸ்யத்தின் ஜீவனின் இரகஸ்யம்.*

- ✡ அதன் வீச்சு அதிகம்.
- ✡ அதன் செயல் தலைகீழாகத் தோன்றும்.
- ✡ தலைகீழாகத் தோன்றுவதை நேராகப் புரிந்து கொண்டால், பேசிச் சாதிப்பதைப் பேசாமல் அதிகமாகச் சாதிக்கலாம்.
- ✡ செய்து முடிப்பதைச் செய்யாமல் அதிகமாக முடிக்கலாம்.
- ✡ பேசிச் சாதிப்பவன் மேடையில் பேசி எலக்ஷனில் ஜெயிப்பான்.
- ✡ பேசாமல் சாதிப்பவர் இமய மலையில் தவம் செய்து பிரான்சில் புரட்சியை உற்பத்தி செய்வார்.
- ✡ இராமன் ஆயுதமேந்தி வென்ற போரை, கிருஷ்ணன் ஆயுதம் ஏந்தாமல் போர்க்களம் சென்று வென்ற போரை, புதுவையிலிருந்து உலகப் போரை வெல்லலாம்.
- ✡ உலகில் அணு ஆயுதம் அழிக்கப்பட வேண்டும்என்று பேச அமைத்த

ஸ்தாபனம் கூடிப்பேசுமுன் வல்லரசுகள் அவற்றை அழிக்க முன்வரும்.

- ✡ உலகில் உணவுப் பற்றாக்குறை அழிய எழுதிய திட்டம் தானே தன்னை நிறைவேற்றிக் கொள்கிறது.
- ✡ வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்க நினைத்து, ஆராய்ந்து, நூல் எழுதி வெளியிட்டால், நாட்டில் கட்டாய வேலை வாய்ப்பு அரசியல் உரிமையாகிறது.
- ✡ ஏழ்மை அழிய உள்ளம் ஏங்கினால் கூலி 100 மடங்கு உயருகிறது.
- ✡ மழை பெய்ய மனம் விழைந்தால் 40 அங்குல மழை 82 அங்குலமாகிறது.
- ✡ பட்டதாரிகள் உயர்ந்த பட்டம்பெற விழைந்தால், எந்தப் பட்டமும் தபாலில் பெறும் நிலை ஏற்படுகிறது.
- ✡ தவணை முறை விற்பனை மற்ற நாடுகள்போல் நம் நாட்டிலும் வர வேண்டும்எனப் பத்திரிகையில் கட்டுரை எழுதினால், நாட்டில் தவணை முறை அமுலாகிறது.
- ✡ தமிழ் மக்கள் அன்னை, பகவான் அருளைப்பெற அவா எழுந்தால் பெருவாரியான மக்கள் அன்பராகிறார்கள்.
- ✡ 1988இல் மாதம் 10,000 ரூபாய் வருமானம் ஏற்பட விரும்பினால், 2000த்தில் மாத வருமானம் ஓர் இலட்சமாக வேண்டும்என மனம் கொண்டால், 2008இல் சம்பளம் 50,000 ரூபாயாக உயர்கிறது.

இது ஆன்மீகம் வளர்ந்த நாடு. பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவதரித்த நாடு. நாட்டை அடிமைத் தளையினின்று அவர் விடுதலை செய்தார். சுதந்திரம் பெற்ற அன்று தினக்கூலி 50 பைசா. குமாஸ்தா சம்பளம் 65 ரூபாய். கலெக்டர் சம்பளம் 400 ரூபாய். ஜனாதிபதிக்கு 10,000 ரூபாய் சம்பளம். இன்று கூலி 200 ரூபாய், குமாஸ்தா சம்பளம் 10,000 ரூபாய், கலெக்டர் சம்பளம் இலட்ச ரூபாய், ஜனாதிபதிக்கு 1½ இலட்சம் சம்பளம். *இன்று அமெரிக்காவில் $25 மில்லியன் சம்பாதித்தவரை* super rich *பெரும்பணக்காரராகக் கணக்கிடுகிறார்கள்.* நம் நாட்டில் அது கனவிலும், கற்பனைக்கும் எட்டாதது. எனினும்,



- ❀ **ஜீவனின் இரகஸ்யம் அறிந்தவர்க்கு அது பலிக்கும்.**
- ❀ **இரகஸ்யத்தின் ஜீவன் பெற்ற இரகஸ்யத்தை அறிந்தவர், அறிந்து பயிலுபவர் அன்னையிடமிருந்து பெறும் அருள் பரிசு அது.**
- ❀ **அது சமர்ப்பணம் முதிர்ந்தெழும் சரணாகதி.**

***ஒரு பொய் சொல்ல முடியாதவர் சரணாகதியை முதன்மையாகக் கொண்டு எந்தத் தொழிலைச் செய்தாலும், அவருக்கு அது பலிக்கும்.***

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வயதானதாலோ, ஓய்வு பெற்றதாலோ அகந்தை அழிந்தாலும் பணத்தின் கவர்ச்சியும், ‘அதிகாரமும்’ இருக்கும்.

***அதிகாரம் போனபின்னும் அகந்தையின் குணம் இருக்கும். அதிகாரம் போவதால் அகங்காரம் அழியாது.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உதவி செய்ய பெரும்பாடு பட்டாலும், பெறுபவர் சிறு குழந்தையாகச் சொல்லிய ஒரு சொல் அதிர்ஷ்டத்தையும் அன்னை அதிர்ஷ்டத்தையும் தடை செய்ய வல்லது.

***அன்றைய சிறுசொல்***
***இன்றைய பெரிய அதிர்ஷ்டத்திற்குத் தடை.***

## பூமி ஜடமில்லை, ஜடம் நீள்வதால் 5ஆம் நிலைக்குரியது (P.81)

பொதுவாக நாம் மண், பூமிஎன்பதை ஜடம்எனக் குறிக்கிறோம். இது தவறில்லை. எனினும், ஜடம்என்பது வேறு. பூமி, மண்என்பது பிரித்விஎன சமஸ்கிருதத்தில் கூறுவது. ஜடம் (matter) என்பது ஜட சக்தி (material force). தத்துவப்படி இது சத் தலைகீழே மாறுவதால் உண்டாவது. பகவான் ஜடத்திற்கு அளிக்கும் விளக்கம் பின்வருமாறு.

1. **சத் பிரபஞ்சத்தில் எழ முனைவதால் பொருள் ஏற்படுகிறது (substance).**
   **இது ஆன்மீகப்பொருள் (Spiritual substance).**
2. **மனம் இப்பொருளை புலன்மூலம் கண்ணுறும்பொழுது சத் மனத்திற்கு ஜடமாகத் தெரிகிறது.**

*மனம் பிரபஞ்சத்தில் சத்தை ஜடமாகக் காண்கிறதுஎனலாம்.* இது தத்துவம்.

இந்த ஜடம் 5 முறை தன்னை மாற்றுகிறது.

1. **முதல் மாற்றத்தில் எழுவது சப்தம்.**
2. **இரண்டாம் மாற்றத்தில் எழுவது காற்று.**
3. **மூன்றாம் மாற்றம் நெருப்பு - ஒளியை - ஏற்படுத்துகிறது.**
4. **நான்காம் மாற்றத்தில் நீர் உற்பத்தியாகிறது.**
5. **ஐந்தாம் மாற்றத்தில் எழுவது பிரித்வி, பூமி, மண் எனப்படும்.**
   **இது ரிஷிகள் கூறியவை.**

பகவான் இதை எழுதுகிறார். ஆனால் முழுவதும் ஏற்றுக் கொள்ளவில்லை.



மேற்கூறியவற்றைப் பஞ்ச பூதங்கள்எனக் குறிப்பிடுகிறார்.

பஞ்சேந்திரியங்கள்என்பவை ஐம்புலன்கள்.

பஞ்சபூதங்களை அறியும் திறனையுடையவை பஞ்சேந்திரியங்கள்.

அதிர்வை உணர்வது சப்தத்தை அறிவது. காது ஒலியைக் கேட்கிறது.

தொடு உணர்ச்சியால் சக்தியை அறிவது உடல்.

பார்வைஎன்பது ரூபத்தை அறிவது. ஒளி ரூபத்தைச் செதுக்குகிறது.

ஒளியும், நெருப்பும் ஒன்றானவை.

நான்காம்பூதம் ருசி.

ஐந்தாம்புலன் வாசனை.

சக்தி சக்தியுடன் தொடர்பு கொள்வதால் எழுவது உணர்வு.

உணர்வை அறிவது புலன்.

புலனின் உறைவிடம் இந்திரியம்.

அவை ஐந்து - பஞ்சேந்திரியங்கள் எனப்படும்.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நினைவுவரும் கடந்தகாலம் உடலின் ஜீவியத்திற்கு உரியது. குறிப்பாக அதன் அகந்தைக்குரியது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வு எதிரொலிக்க ஒரு வாழ்வு நிலையை அமைப்பால் செறிந்த நிறைவு செய்ய வேண்டும்.

***எதிரொலிக்குச் செறிவு தேவை.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**960) சாதனைக்குரிய வேலை தயாரானபின், முன்னிலையின் அனுபவத்தால், அது நிர்ணயிக்கப்படும்.**

**சாதனைக்குத் தயாராகுமுன், அனுபவம் வேலையைக் கெடுக்கும்.**

**தயாரானபின் அனுபவிக்க மறுத்தால், சாதனையைத் தடை செய்யும்.**

*அவசரமாக அனுபவிப்பதும், அனுபவிக்க மறுப்பதும் சாதனைக்குத் தடை.*

தலையில் கண்ணாடி சாமான்களைச் சுமந்து விற்கும் வியாபாரி, தன் இலாபத்தைக் கணக்குப் போட்டு, பெரிய தொகை சம்பாதித்து, ராஜகுமாரியைத் திருமணம் செய்து, அவளை எட்டி உதைப்பதாகக் கற்பனை செய்து, காலை உதறி, தலைச் சுமை விழுந்து, அனைத்தும் போனது, கதை.

✡ இந்தக் கதை எல்லா நாடுகளிலும் உண்டு.

நமக்குத் தெரிந்தவரில் இதற்கு விலக்குண்டாஎன ஆராய்ந்தால் உலகம் புரியும்.

நம் சொந்த அனுபவத்தில் நாம் இதற்கு விலக்காக எத்தனை முறை இருந்திருக்கிறோம்என நினைத்துப் பார்த்தால், நமக்கு நம்மைப் புரியும்.

*இது விதி. இதற்கு விலக்காக இருப்பது கடமை.*

✡ அமெரிக்காவிற்குப் பயிற்சிக்காகப் போக ஏற்பாடு செய்தபொழுது, விசா பெறுமுன் அனைவரிடமும், போய் வந்தபின் நடப்பதுபோல் நடந்தவர்க்கு விசா கிடைக்கவில்லை. மேலும் இரு ஆண்டுகளுக்கு விசாவுக்கு விண்ணப்பிக்கக் கூடாதுஎன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



✡ எதிர்பார்ப்பது சுபாவம். காரியத்தைப் பூர்த்தி செய்ய தெம்பிருந்தால், காரியம் பூர்த்தியாகும். தெம்பில்லாவிட்டால், மனம் எதிர்பார்க்கும். எதிர்பார்க்கும்வரை காரியம் பூர்த்தியாகாது. எப்படி எதிர்பார்ப்பதைத் தடுப்பது?

- **வேறு வேலையில் கவனம் எதிர்பார்ப்பதைக் குறைக்கும், தடுக்காது.**
- **எதிர்பார்ப்பு வேண்டாம்எனப் பிரார்த்தனை செய்தால், பலிக்கும்.**
- **அந்த பிரார்த்தனை செய்ய அனைவராலும் முடியாது.**
- **பிரார்த்திக்க முடியாதவர், அன்னையை அழைக்க முயன்றால், அதுவும் கடினம்.**

  **அழைத்தால் எதிர்பார்ப்பு குறைந்து, மறையும்.**

  **மறைந்த நேரம் காரியம் முடியும்.**

  **அழைப்பு இல்லாத தெம்பைத் தருகிறது.**

✡ நமது மரபு சிறுகக் கட்டிப் பெருக வாழ வேண்டும்என்பது.

அளவு கடந்து அனுபவிக்க முயல்வது தவறான எண்ணம்என்பது பரம்பரை.

விரதம் நல்லது, ஆசை தவறுஎன்பது கொள்கை.

- **அன்னை சட்டம் இதற்கு எதிரானது.**

  **அனுபவிக்க அனுபவிக்க வசதியதிகமாகும்என்பது அன்னை.**

  **பரம்பரை சரி, அன்னையும் சரிஎன்றால் எப்படிப் புரியும்?**

  **மனம் குறுகியதானால், பரம்பரை சரி.**

  **மனம் விசாலமானால், அன்னைக்குப் பொருந்தும்.**

என்ன செய்கிறோம்என்பதைவிட, என்ன மனநிலையில் செய்கிறோம் என்பதே முக்கியம்.

அனுபவிப்பது சரி, நல்லது, நல்ல மனநிலையில் பெருந்தன்மையாக, சொல்பமாக இல்லாமல் பொருள்களை அனுபவிப்பதே முறைஎன்பது அன்னை சட்டம்.

✡ இதே கருத்தை இராமலிங்க சுவாமிகள் "சிவபெருமான் திருவுள்ளம்" என ஒரு பாடல் எழுதியுள்ளார்.

✡ செலவு செய்தால் பணம் வரும்என்பதும், அனுபவித்தால் பெருகும் என்பதும் ஒன்றே.

**ஆசையுள்ளவரை அனுபவிக்கக் கூடாது. ஆசையின்றி அவசியத்திற்காக அனுபவிக்க மறுக்கக் கூடாது.**

❀ **சத்தியம் என்றும் அழியாது.**

❀ **மரபை மாற்றி, அன்னை மரபைக் கடக்க நமக்கு அளிக்கும் மனநிலை, முறை இது.**

❀ ❀ ❀

**961) நகைச்சுவை வாழ்வின் வளமான நயம்.**
**அறியாமை தன் மடைமையை இனிமையாக உணர்ந்து, மகிழ்ந்து, பெருகுதல் நகைச்சுவையாகும்.**

***மடைமையின் இனிமையை மகிமையாகக் கருதுவது நகைச்சுவை.***

ஒரு நிகழ்ச்சியை விபரமாக எவரும் கூறலாம். பலரால் அரைகுறையாகக் கூற முடியுமே தவிர, முழுமையாகக் கூற முடியாது. அனுபவசாலிகள் நிகழ்ச்சியின் பகுதிகளை அறிவர். அவர்கள் அப்பகுதிகள் சிறக்கும் வகையில் அதே நிகழ்ச்சியைக் கூறுவது கேட்பவர் பரவசப்படுவர். நடந்ததை இனிமையாகக் கூறுபவரும் உண்டு. அனைவரும் சிரித்து மகிழும்படியும் கூறலாம். பலர் சிரிக்க வேண்டுமானால், அது ஒருவரைக் கேலி செய்வதாக அமையும். எவரையும் கேலி செய்யாமல், அனைவரும் மகிழும்படிக் கூறும் திறமை புலமையின் இனிமை. மடையன் தன்னை வியந்து கொள்வான். உலகம் அறியாமையென அறிவதை, அறிவில் அறிவின் சிறப்புஎனக் கொள்வான். அதை நினைந்து மகிழ்ந்து, நினைவு சிறந்து, நெகிழ்ந்து பூரிப்பான். அது நகைச்சுவையின் சிறந்த அம்சம். அது போன்றவை,

✡ முரண்பாட்டை உடன்பாடாகக் கூறுவது.

✡ சிறியதைப் பெரியதாகப் புனைவது.

✡ துரோகம் செய்ததை விஸ்வாசம் என்பது.

✡ நஷ்டத்தை இலாபம்என வர்ணிப்பது.



✡ மனைவிக்கு அடங்கிய புருஷனை, தம்பதிகள் கருத்து வேற்றுமை-யற்றவர் என்பது.

✡ வகுப்பிற்கு இரண்டு வருஷம் படிப்பவனை, பள்ளி மீது விஸ்வாசமானவன்என விவரிப்பது.

✡ உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்து வாராத சோம்பேறியை, தவம் செய்பவர்எனக் கூறுவது.

✡ திருட்டுத் தொழிலை முதலில்லாத தொழில் என்பது.

✡ கடைத் தேங்காயை வழிப்பிள்ளையாருக்கு உடைப்பவனை, வள்ளற்பெருமான் என்பது.

✡ இராமாயணப் பிரசங்கம் பாரமாக இருப்பது.

✡ சொந்த வீடில்லாதவரை, எந்த வீட்டிற்கும் உரிமையுள்ளவர் என்பது.

✡ ஊரில் உள்ள அனைவரையும் ஏமாற்றியவரை, ஊரறிந்தவர் என்பது.

✡ பெற்ற நஷ்டத்தைப் புத்திக் கொள்முதலாக்குவது.

ஆண்டி மடம் கட்டியது கதை. மடையன் தன் அறியாமையை அறிவு எனக் கொண்டு, பெருங்காரியங்களைச் செய்வதாகக் கற்பனை செய்வதுண்டு. அது வெளியில் வாராது. மடைமை மகிமை நிறைந்ததானால், மடையன் தன் கற்பனையை உண்மைஎன நம்பி, வெளியில் சொல்லப் பிரியப்படுவான். அதனடிப்படையில் பிறருக்கு உதவி செய்ய, சேவை செய்ய முன்வருவான். கேட்பவர்கட்கு அது நகைச்சுவையின் உச்சக்கட்டமாகும். தான் நம்புவதைப் பிறரும் நம்புவதாக நினைப்பான். தன்னைக் கேலி செய்வதை அறியான். பலரும் கேலி செய்ய அவனை அழைத்துப் பேசச் சொல்வார்கள். ஆர்வமாக முழுநம்பிக்கையுடன் அவன் பேசுவது அனைவருக்கும் உச்சக்கட்ட நகைச்சுவை நிகழ்ச்சியாக அமையும்.

❀ ❀ ❀

**962) சாதனைக்குரியவை முறையாக**
**(1) வலிமை, (2) அமைப்பான முறை, (3) செயல்திறன் (skill).**

***வலிமையும், திறமையும் சாதிக்கும்.***

இரும்பு வலிமையானது. ஒரு குச்சிக்கு இரும்பின் வலிமையில்லை. அடிமரம் கிளையைவிட வலிமையானது. காற்றில் கிளைகள் சேதமாகும், அடிமரம் சேதமாகாது. கல் சுவருக்கு மண் சுவரைவிட வலிமை அதிகம். இவை பொருள்களின் வலிமை. கிராமத்தில் உள்ளூர்க்காரனுக்குள்ள வலிமை வெளியூர்க்காரனுக்கு இருக்காது. மதர் தெரிசா நோபல் பரிசு பெற்றாலும், உள்ளூரில் அவரை வெளியேற்ற பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டன. ஒரூரில் 1500 ஏக்கர் நிலமிருந்தால், நிலத்திற்கு வேலி போடுவதில்லை. பயிரிட ஆரம்பித்தால், ஆடு, மாடு வெளி வாரா. இது உள்ளூர் நிலை. வெளியூர்க்காரனுக்கு இந்நிலையில்லை. ஆடு வரும், மாடும் வரும். அவன் நிலம் 100 ஏக்கரானால் 100 ஏக்கருக்கு வேலிபோட நிலத்தின் விலையாகும். அந்த வேலியைப் பிய்த்துக் கொண்டு 10 மாடு வந்தால், அவற்றைப் பட்டியில் அடைக்கலாம். ஏராளமாகப் பயிரைச் சிதைத்தபின் பட்டியில் அடைத்து என்ன பயன்? பட்டியில் அடைத்தால், ஊரார் திரண்டு வந்து மாடுகளை விட்டுவிட வேண்டும் எனக் கேட்பார்கள். ஊராரைப் பகைத்துக்கொண்டு பயிரிட முடியாது. கோர்ட்டிற்கும், போலீசுக்கும் போய் பயிரிடுதல் நடக்காது. நடைமுறையில் 100 ஏக்கர் நிலம் உள்ளவர் நிலத்தில் மாடு வந்தால், மாட்டின் சொந்தக்காரனை அறையில் அடைத்து, நையப் புடைப்பார். எதிர்க்க முடியாது. அதன்பின் எந்த மாடும் வாராது. 100 ஏக்கர் நிலம் வெளியூரில் பயிரிடும் அன்பருக்கு உள்ளூரில் உள்ளவர் பெறும் பாதுகாப்பை வன்முறையின்றி சமர்ப்பணம் பெற்றுத் தரும்.

*அதுவே வலிமை எனப்படும்.*

கொஞ்ச நாளானபின் அவருக்கு ஊரார் பயப்படுவார்கள். அவர் பெயரைக் கேட்டால் நடுங்குவார்கள். அந்த வலிமையின்றி அரசியலிலோ, ஊரிலோ பெருங்காரியம் செய்ய முடியாது. அடி உதவுவதுபோல் அண்ணன், தம்பி உதவமாட்டார்கள். அந்த வலிமை இல்லாதவனால் பணம் சம்பாதிக்க முடியாது, எலக்ஷனில் ஜெயிக்க முடியாது, திருமணம் நடத்த முடியாது, மரியாதையுடன் குடும்பம் நடத்த முடியாது.



- ✡ சாதிப்பவர் அனைவருக்கும் வலிமையுண்டு.
- ✡ வலிமையுள்ளவர் அனைவரும் திறமையால் சாதிப்பார்.

திறமைஎன்பது பல கட்டங்களுக்குரியது. தெம்பைத் திறமை என்பார்கள். சொல்லுக்குக் கட்டுப்படுவது திறமை. பலரைச் சேர்த்துப் பெரிய காரியங்களைச் செய்வதும் திறமை. நேரம் வரும்பொழுது சாதுரியமாகக் காரியத்தை நிறைவேற்றுவதும் திறமை. இவற்றை energy தெம்பு எனவும், force சக்தியெனவும், power பவர் எனவும், அமைப்பு முறை organisation எனவும், செயல் திறன் skill எனவும் குறிப்பிடுகிறோம்.

நான்கு மில் உள்ளவர் மகனுக்கு கோடீஸ்வரன் வீட்டில் சம்பந்தம் செய்தார். கோடீஸ்வரனுடைய ஏராளமான உறவினர் ஸ்பெஷல் இரயில் எடுத்துக் கொண்டு வந்தனர். ஏராளமான செலவு. பெரிய ஆயிரக்கணக்கான உறவினர்கள். அலங்காரம், ஆர்ப்பாட்டம் பெரியது. விருந்திற்குச் சாப்பாடு தயாராக இல்லை. இருந்த சாப்பாட்டை பரிமாறும் ஏற்பாடில்லை. அனைவரும் ஹோட்டலில் சாப்பிட்டனர். Organisation அமைப்பு முறை வேண்டும். பெரிய விசேஷங்களில் queue வரிசை, சாப்பாடு, மற்ற ஏற்பாடுகளை அனைவரும் பாராட்டுவர்.

எந்த இடத்திலும் எதுவும் தவறும். அந்த நேரம் அதைக் கவனமாக, பக்குவமாக, சாதுரியமாகக் கவனித்து, சமாளிக்க வேண்டும். அதற்குரிய ஏற்பாடுகள் அவசியம். அதை skill செயல் திறன் என்பார்கள்.

யோகச் சாதனை செய்ய வலிமை, திறமை அவசியம். உடல் உறுதி, மன உறுதி, நிலையான இலட்சியம், அசைக்க முடியாத, ஆட்டங்காணாத மனப்பான்மை, பட்டினி கிடந்தாலும் பாதிக்கப்படாத உடல் அஸ்திவாரம். அது இல்லாதவரால் யோகத்தை ஆரம்பிக்க முடியாது.

பயிரிட்டால் ஆடு, மாடு சேதம், எலக்ஷனில் அடாவடிக்காரன் அட்டூழியம், யோகத்தில் ஆசை, அவசரம் உள்ளிருந்தும், hostile

forces எதிரான சக்திகள் வெளியிலிருந்தும் வரும். விஸ்வாமித்திரர் தவம் செய்ய இராமனைப் பாதுகாப்புக்கு அழைத்துச் சென்றார்.

காட்டில் தவசி தம் இடத்தைச் சுற்றி ஒரு வட்டம் போடுவார். மந்திரம் சொல்வார். அந்தக் கோட்டைத் தாண்டி விஷ ஜந்துக்கள் வாரா. ஒரு வேர் 4 அங்குலம் எடுத்து சாப்பிட்டால் ஒரு வாரம் பசிக்காது. இதுபோன்ற யுக்திகள் தவம் பலிக்கத் தேவை.

பூரண யோகத்திற்கு வம்புப் பேச்சு, shopping, television பார்ப்பது, மரியாதைபோன்ற ஆயிரம் எண்ணங்களும், ஆசைகளும் உள்ளிருந்தும், வெளியேயிருந்தும் எழும்.

***அவற்றால் பாதிக்கப்படாத மனநிலை யோகத்திற்கு அவசியம்.***

❀ ❀ ❀

*தொடரும்....*

## ஜீவிய மணி

**ஆனந்தத்தின் உற்பத்தி ஸ்தானம் அனந்தம்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு நிலை (level) முறையால் (organisation) செறிவாக நிறையும்பொழுது, அதை மேலும் உயர்த்த ஒரு நல்ல காரியம் செய்தாலும் (தவறு இழைத்தாலும்) வாழ்வு எதிரொலிக்கும்.

***செறிவான நிலை நல்லதாலும் கெட்டதாலும் உயரும்.***





## P.106 Till in the naked ether of the peaks

## ஆடையையிழந்த ஆகாயத்தின் உச்சி

- ✡ **ஆத்மாவின் எளிமையே மிச்சமாக நின்றது**
- ✡ **அழியாத ஜீவனின் முதல் பளிங்குஆடை**
- ✡ **பாவத்தின் பாரத்தைத் தாங்க அது வர வேண்டும்**
- ✡ **கடுமையான புவியின் அனுபவம் சேர்ந்த சிறப்பு**
- ✡ **அது மீண்டும் வந்து ஏற்ற பாரமான ஆடை**
- ✡ **பூமியின் வஸ்த்திரம் புனைவதற்கு முன் எழுந்தது**
- ✡ **அணுவின் சூன்யம் அதற்குரிய கருவியாயிற்று**
- ✡ **ஒளிமயமான திரையின் போர்வை**
- ✡ **இரகஸ்ய ஆத்மாவைச் சுற்றி அணியப்பெற்று**
- ✡ **பிரகாசமான லோகங்களின் சூட்சுமராஜ்யம்**
- ✡ **அற்புத உலகு தரும் ஜொலிக்கும் வரம்**
- ✡ **திருஷ்டியும் தவறாத சந்தோஷமும்**
- ✡ **சிறப்பான ரூபம் வெளிப்படுவதே முக்கியம்**
- ✡ **அழகு நிறை சிகரம்; ஆபத்தான மடுவு**
- ✡ **பிரகிருதி தோற்ற எல்லைக்கு வருகிறது**
- ✡ **பிளவின் பயங்கரம் ஆர்வம் தரும் அழகின் அற்புதம்**
- ✡ **ஆபத்தான தெய்வத்தின் கவர்ச்சியான கண்கள்**
- ✡ **பேய்க்கும், பாம்புக்கும் அளிக்கும் அதிசயம்**
- ✡ **ஜடஇருளின் சூழல் அதன் நிஷ்டைக்குரிய சமாதி**
- ✡ **மரணத்தின் தொய்ந்த ஆடையை அமரத்துவமாக அளிக்கிறது**
- ✡ **அதுவே நம் அழிவுக்குரிய உத்தரவு**
- ✡ **பெரிய ஜீவியம் அதன் கருவியாகச் செயல்படுகிறது**

✡ மறைந்த அதிகாரத்தின் மரக்கலமது

✡ ஜடமான லோகத்தின் சூட்சுமமான தரை

✡ அழியும் ரூபத்தில் அழியாத அஸ்திவாரம்

✡ ஞாபகத்தின் சிருஷ்டி மடிப்பாக அமைந்தது

✡ அழியும் பொருள்களின் அழியாத அம்சத்தைக் காப்பாற்றுகிறது

✡ அதன் தாழ்ந்த சக்திகள் நம் அழிந்த திறனைக் கண்டன

✡ நம் பகுத்தறியும் அறியாமையைக் கூறும் எண்ணங்கள்

✡ உடலின் அசைவை உணர்த்தும் உணர்ச்சிகள்

✡ புதிய பெரிய சக்தியின் இரகஸ்ய மூச்சு

✡ அகம் காணும் மறைபொருளான சூரியன்

✡ அதன் நேர்த்தியான எண்ணம் மறைக்கும் ஊற்று

✡ நம் சிறந்த ஜோதிமயமான கற்பனை

✡ திருவுருமாறும் வண்ணம் தீண்டும் பொருள்கள்

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நம் சிரமங்களை, சக்திமழைக்குச் சமர்ப்பணம் செய்தால் அவை கரையும். சக்திமழை நிரந்தரமாகும் அக அமைப்பை நாம் ஏற்படுத்தலாம்.

***சக்திமழை அக அமைப்பை ஏற்படுத்தும்.***





# மனிதனும் மிருகமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

சியாமளா ராவ்

தியானம்என்றால் என்னஎன்பது தெரியாது. ‘கடவுள்’ என்றறிந்ததை எந்தக் கோவிலுக்கும் சென்று வணங்கியவனில்லை, நினைவு தெரிந்த நாளிலிருந்து. ஆனால், இன்று, தன் தாயின் விருப்பத்திற்காக வந்தவன், எல்லோரையும் போல் உட்கார்ந்தான். அன்னை, ஸ்ரீ அரவிந்தரைப் பார்த்தான். மனதுள் என்ன நிகழ்கிறது என்பது புரியாமலேயே... பரப்பிரும்மமாய் அமர்ந்தவன், தன் இமைகளையும் மூடினான். அவ்வளவுதான் அவன் அறிந்தது.

சத்தமின்றி அனைவரும் தியானம் முடிந்து கலைந்தனர். பூ பேக்கட்டை எடுத்துக்கொண்டு, வணங்கிச் சென்றனர். அன்னம்மாவும் தியானத்திலிருந்து எழுந்தாயிற்று. திரும்பிப் பார்த்தாள். மகன் அப்படியே அமர்ந்திருப்பதைப் பார்த்தவளின் கண்கள் சொரிந்தன. அன்னையை நோக்கி வீழ்ந்து, சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்தாள். விழிகள் தங்கள் வேலையைத் தொடர்ந்து செய்தன. மனமும், மகனின் மனம் திருந்த வேண்டியபடியிருந்தது. அவளும் சத்தமில்லாமல் இன்னொரு புறத்தில் அமர்ந்தாள். அன்னையின் சரணத்தை விடாமல் சொல்லியபடியேயிருந்தாள்.

திடீரென, யாரோ தட்டிவிட்டதுபோல், விதிர்விதிர்த்து கண்களைத் திறந்தவனின் சரீரமும் விதிர்விதிர்த்தது. எங்கு இருக்கிறோம்என்பதே புரியவில்லை. அன்னையின் படம், அவனுக்கு விஸ்வரூபமாகத் தெரிந்தது. ஆனால் மனதுள் ஒருவிதமான எண்ணமும் தோன்றாமல், அயோமயமாய் வீழ்ந்து வணங்கியவன் முதுகு குலுங்கியது.

புரிந்துகொண்ட அன்னம்மா, அவனை ஆசுவாசப்படுத்தி எழ வைத்தாள். சைகையாலேயே அவனை எழச்சொல்லி, புஷ்ப பிரசாதத்தையும் எடுத்துக்கொள்ளக் கூறி, மனமில்லாமலேயே வீட்டிற்கு வந்தாள். வழியில் இருவரும் பேசிக்கொள்ளவேயில்லை.

வீட்டிற்குள்ளும் வந்தாயிற்று. மனைவி சாப்பாடு பரிமாற, வேண்டும், வேண்டாம் என்பதைக்கூட சொல்லாமல் சாப்பிட்டு எழுந்தான். மௌனமாகவே படுத்தான். தூங்கியும்போனான்.

விடிந்தது. எப்போதும்போல் குளித்து, சாப்பிட்டு, தன் வேலைக்குக் கிளம்பினான். மனைவியும், பெற்றவளும் சந்தோஷமாகவே வழியனுப்பினர். மாலை நேரம் ஆயிற்று. வீட்டிற்கு இன்னும் வரவில்லை. சரி, வேலையிருக்கும்என பூக்கூடையை எடுத்துக்கொண்டு அன்னம்மா தியானமையத்திற்கும், மருமகள் வியாபாரத்திற்கும் சென்றார்கள். இரவு எட்டு மணி வரை வரவில்லை. பரிதவித்துப்போய் அன்னையை வேண்டினார்கள். வந்தான். வந்தவனின் கால்கள் தடுமாற, வாய் குழற, ஆடியபடி வந்தான். பெற்றவளும், தாலி கட்டியவளும் அப்படியே உறைந்துபோய் நின்றார்கள்.

❀❀❀

அன்னையை எதை வேண்டுமானாலும் கேட்டு வணங்கலாம், பிரார்த்தனை செய்யலாம். ஆனால், அன்னைக்குத்தானே தெரியும்... எதெது, எப்பொழுது நமக்குத் தரவேண்டும் என்பது. அதை உணருவதேயில்லை மனிதர்களாகிய நாம். “நான் எதைக் கேட்டு வேண்டினேன்... நீ இதைத் தந்திருக்கிறாயேம்மா...” என்று அசமாதானத்துடன்தான் அதை ஏற்றுக்கொள்கிறோம். ‘அன்னை’ என்று நாம் எப்பொழுது உரிமையுடன் கூப்பிடுகிறோமோ.... அப்போதே நாம் உணர வேண்டியது, முக்கியமானது, ‘அன்னை’ நம் அனைவருக்கும் பெற்ற தாய் போன்றவரென்று.

பெற்ற தாய் என்ன செய்வாள்? ம்... யோசித்துப் பாருங்கள். நம் உடலுக்கு எது நல்லதோ, எப்போது எதைத் தரவேண்டுமோ... அதை மட்டுமே யோசிப்பார், தருவார். ஆனால், நாம் குழந்தைகளைப் போல, நமக்கு வேண்டியதை மட்டுமேதான் கேட்கிறோம், எதிர்பார்க்கவும் செய்கிறோம், நாம் கேட்டது கிடைக்க வேண்டுமென்ற பிடிவாதத்துடன். இது சாதாரண மனிதர்களாகிய நம் மனதின், அதுவும் ‘பக்குவமே’ அடையாத மனதின் இயல்புதான் அது. அதைக் கொஞ்சம், கொஞ்சமாக மாற்றிக்கொண்டு, அன்னையின் முன் ‘சமர்ப்பணம்’ செய்துவிட்டு, அதைப் பற்றிக் கவலைப்படாமலிருப்பதற்கு



நம்மை நாமே பதப்படுத்திக்கொள்ள வேண்டும். சரியான பதத்திற்கு நம் மனம் வந்துவிட்டால்... நம் வாழ்வில் ‘முன்னேற்றம்’ என்பது எப்படி, எந்த விதத்தில் வருகிறதுஎன்பது தெரியாமலேயே... கரைபுரண்டோடும் ஆற்று நீரைப் போல் ‘சலசல’வென வரும். இது சர்வ நிச்சயம். ஒரு தின்பண்டம் செய்யும்போது, பதம் தவறிவிட்டால் பதட்டப்படும் நாம், நம் மனதை சரியான பதத்தில் வைத்திருப்பது அவசியம்என்பதை உணர வேண்டாமா?

அன்னம்மா, தன் மருமகளைப் பார்த்தாள். அவளும் மாமியாரைப் பார்த்தாள். இருவரின் விழிகளிலும் நீர் நிரம்பியிருந்தது. அப்படியே அன்னைக்கு ஊதுவத்தி ஏற்றி, மௌனமாகவே பிரார்த்தனை செய்தனர். கண்களைத் திறந்தனர். அவரவர் வேலையைப் பார்த்தனர். அன்னம்மா பொடிநடையாய் ‘தியான மையத்திற்குச்’ சென்றாள். உட்கார்ந்தாள்.

சரசரவென சத்தம் கேட்க, இமைகள் திறக்க, அன்னை அவளையே பார்ப்பது தெரிந்தது.

தலையையாட்டினாள். “இனி எனக்கு கவலையேயில்லையம்மா. ஆனா, அப்பப்ப உன்னைத் தொந்திரவு பண்ணறதைப் பொறுத்துக்கம்மா. உன்னைவிட்டா எனக்கு யாரிருக்கா? அம்மா... உனக்கே தெரியும். என் மவனை நீ நிச்சயமா சரி பண்ணிடுவே. அந்த நம்பிக்கை எனக்கு இருக்குதும்மா... உன்னையே நம்பி விட்டாச்சு. சரணம் தாயே...”

மனதுள் புலம்ப ஆரம்பித்தவள் சட்டென தன்னைத்தானே அடக்கிக்கொண்டாள்.

“அம்மாகிட்டே சொல்லியாச்சு. அதுக்குப்பிற்பாடும் நாம ஏன் மனசைக் கஷ்டப்படுத்திக்கணும். தப்பாச்சே! காலுலயோ, உடம்புலயோ, எந்த எடத்துல அடியோ, காயமோ பட்டாலும் நாம ‘அம்மா’ன்னுதானே கத்தறோம். அதுக்குப் பிற்பாடு, மருந்து போட்டுக்கினு, வாய மூடிக்கினுதானே இருக்கறோம். அப்படியிருக்கறப்ப... இப்ப மட்டும் நாம ஏன் புலம்பறோம்? தப்புதான்மா... தப்புதான். உங்கிட்டே அல்லாத்தையும் சொல்லியாச்சு. பிற்பாடு... நான் ஏன் ஔப்பறிச்சுக்கணும், தப்பு. தியானமையத்துல... புத்தகத்தைப் படிக்கிறாங்க. புரியாதவங்க... என்னையப்போல இருக்கிறவங்க... எவ்ளோ சந்தேகங்களையெல்லாம் கேக்கிறோம்.

எவ்ளோ அளகா... நமக்குப் புரியறாப்பல... எவ்ளோ நல்லா சொல்றாரு. நமக்குத்தான் எல்லாமே ஜல்தியா வேணுமே. அதனாலதானே 'அன்னை'யையும் அடம் புடிச்சுத் தொந்திரவு செய்யிறோம். நாம திருந்தணும், நிதானமா நடந்துக்கணும், பொறுமையாயிருக்கணும். எப்போ... நமக்கு, எது தேவையோ... அது தானா கிடைக்கும். அது அன்னைக்குத்தான் தெரியும்னு... சொன்னாங்கதானே. அதை நாம ஏத்துக்க வேணாமா?... அம்மா... இனிமே உன்னைத் தொந்திரவு செய்யவேமாட்டேன்மா. நிச்சயமா... என் மவன் திருந்துவான். ம்... தப்பு. நீ... திருத்திடுவே. அது வரைக்கும் நான், உன்னை வேண்டிக்குவேனேகண்டி... தொந்திரவா எதுவும் செய்யமாட்டேன். மன்னிச்சுடும்மா. அன்னையே சரணம்... சரணம்... அன்னையே சரணம்''.

❀❀❀

சத்தியன் வந்ததிலிருந்தே... அவரும் மாமாவுமாக காலையிலேயே சீக்கிரம் எழுந்து, தியானமையத்தின் வேலைகளைப் பார்த்தனர். கூடவே சீனுவும், ராமுவும் பெருக்குவது, துடைப்பது, எல்லாவற்றையும் பொறுப்பாகச் செய்தார்கள்.

அன்னம்மா விடியலில் பூக்கூடையைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, வாசலைப் பெருக்கிக் கோலம் போடுவாள். அப்போதே குளித்துவிட்டுத்தான் வந்திருப்பாள்.

''நானு வூட்டெல்லாம் பெருக்கித் தொடைக்கிறேனே சாமி... பாவம் பசங்க செய்யுதுங்களே...''

உடனே ராமு கூறிவிட்டான். ''ஆயா, நாங்க ரெண்டு பேரும் செய்யணும்னு நினைச்சுத்தான் செய்யிறோம். பாருங்க, நீங்க வாசல் தெளிச்சுக் கோலம் போடுறீங்க. எவ்ளோ அழகாயிருக்கு தெரியுமா? எங்களுக்கு அதெல்லாம் தெரியாதே... அதான் எங்களுக்குத் தெரிஞ்சதைச் செய்யிறோம். சரியா ஆயா...''

சொன்ன ராமுவின் கன்னங்களைத் தடவி நெட்டி முறித்தாள் அன்னம்மா. எட்டு மணியிலிருந்து பள்ளிச் செல்லுமுன், பள்ளிச் சிறுவர்களும், ஆபீஸ் போகும்முன் பெண்களும், ஆண்களுமாய், ஒரு ஐந்து நிமிடங்களாவது நின்று தியானித்துப் போவதால், வருபவர்கள் வருமுன், தியானமையம் சுத்தமாகயிருக்க சீக்கிரமே



எழுந்து துப்புரவாகச் செய்தார்கள், சத்தியனும், மாமாவும். அதுவும் சீனுவும், ராமுவும் ஐந்து மணிக்கே இவர்களிருவருக்கும் காபி எடுத்துக்கொண்டு, தாங்களும் குளித்துவிட்டு வருவதால், மற்ற வேலைகளைக் கவனித்து, பூ அடுக்குவது, பேக்கட்டில் பூ போடுவது, பின்புறத் தோட்டத்திலிருந்து பூக்களைப் பறிப்பதுமாக, வேலைகளை முடித்து, தாங்களும் அமர்ந்து தியானம் செய்து முடித்து, வீட்டிற்குச் செல்வார்கள்.

இருவரும், டிபனோ, இல்லையென்றால் எது இருக்கிறதோ, அதை, சாப்பிட்டு, மதியத்திற்கும் எடுத்துக்கொண்டு, அதற்குள் ஒரு வேலையாக இரண்டு வீடுகளுக்கு டிபனை எடுத்துக்கொண்டு போய் கொடுத்துவிட்டு, காலேஜுக்கும், பள்ளிக்குமாகக் கிளம்பி விடுவார்கள். இது தினந்தோறும் நடந்து வந்தது.

தினந்தோறும் கேஸடுப்பை மூட்டுமுன், குளித்துவிட்டு, அன்னைக்கு வத்தி ஏற்றி, பிரார்த்தித்த பின்புதான் மற்ற வேலைகள் என்பதில் உறுதியாகயிருந்தார்கள்.

மாலை பிரார்த்தனைக்கு வீட்டில் எல்லோரும் சென்றாலும், பார்வதி மட்டும் வீட்டிலேயே, அந்த 'ஆறு மணி' ஆனவுடன் ஊதுவத்தி ஏற்றி, தியானத்தில் அமர்ந்துவிடுவாள்.

சஞ்சலமற்ற மனம். நடந்ததைப் பின்நோக்கி மனதுள் சென்று நடந்து, அதைப் பற்றிய நினைவுகளைத் திரும்பத் திரும்பக் கொண்டு வருவதுஎன்பது அவளால் முடியாத காரியம். கடந்தவைகளும், நடந்தவைகளும் அவளைவிட்டு விலக்கியாயிற்று. மீண்டும் அது அவளுள் நுழைய அவள் அனுமதிக்காததால், அந்த சஞ்சலமோ, எண்ணங்களோ அவளிடம் இல்லாமல், அந்த வெற்றிடமான இடத்தில் அன்னையும், ஸ்ரீ அரவிந்தருமே 'ஜம்'மென்று அமர்ந்திருந்தனர்.

தியானம் முடிந்து, 'பரம்பொருள்' எடுத்து படிக்க ஆரம்பித்தாள். அவள் திறந்த பக்கம் 138ஆம் பக்கம். முதல் பாராவைப் படித்தாள்.

''சரியான உறவு பூரணத்திற்குரியது. இறைவனிடமிருந்து எழுந்து வருபவை அவை. வாழ்வின் அமைப்புகளை சத்தியத்தின் சட்டம் கடந்தது. வாழ்வு வையகத்தை நோக்கி நிமிர்ந்து நிற்கிறது. சத்தியமே அதன் பூரணம். அதுவே விடுதலை. அகந்தை அதனுடைய பண்புகளை உருவாக்கியது. அவற்றை அழிப்பதே இலட்சியம். ஆனால், அதுவே மகுடமன்று. துன்பம், தீமை, மடைமை, சிறுமை ஆகியவை

உள்ளன. அவற்றைக் கடப்பதே சிகரம்''.

படித்துவிட்டு புத்தகத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டு, பின் அன்னை, ஸ்ரீ அரவிந்தரைக் கண்குளிரப் பார்த்தாள்.

தினமும் பார்க்கும் அதே ஸ்ரீ அரவிந்தர்தான், அன்னைதான். ஆனாலும் ஏதோ அன்றுதான் புதியதாகப் பார்ப்பதுபோல் பார்த்துப் பரவசப்பட்டாள் பார்வதி.

❀ ❀ ❀

''மனம், மனசு, உள்ளம்'' எப்படி வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் எல்லாமே ஒரே அர்த்தத்தைத்தான் கொடுக்கிறது. ஆனால் அந்த மனம் என்பது... சாதாரணமானதன்று... அல்லவே அல்ல.

சின்னஞ்சிறிய உருவமுள்ள மனம் என்பதில் அடக்கமானது, சொல்ல முடியாத அளவிற்கு எண்ணங்களின் கூட்டங்கள். அதில் நல்லவைகள் மட்டுமன்று, அல்லாதவைகளும்தான் நிரம்பியுள்ளன. பல தரப்பட்டவைகள் நிரம்பியிருக்கும் அந்த மனம் என்னும் பாத்திரத்திலிருந்து நாம் நம் சமயத்திற்குத் தகுந்தது போன்றவைகளைத்தான் தேர்ந்தெடுக்கிறோம். அதற்கு சளைப்பதும் இல்லை, யோசிப்பதுமில்லை.

''இது தவறா?'' என்கிற கேள்வி சரிதான். ஏனெனில் சரி, தவறு என்னும் இரண்டு விஷயங்கள் உள்ளபோது, நமது மனதின் யோசிப்பு மிகவும் சரியான, தீர்க்கமானதாகயிருக்க வேண்டாமா?

இல்லையே, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அல்லவா நம் மனம் செயல்படுகிறது. ஒரு நல்லது நடக்க, சந்தர்ப்பத்தை உபயோகிக்கலாம். ஆனால்... அதே சந்தர்ப்பம் வேறுபடும்போது... நாம் சரியானதைக் கூற தயங்கக்கூடாது. அதுதானே சரி. உதாரணத்திற்கு...

நாம் ஒருவரைப் புகழும் போது, நம் மனதிற்கேற்ப வார்த்தைகளைத் தேடாமல் புகழலாம், பேசலாம்.

ஆனால், அதே ஒருவரைக் கோபித்துக்கொள்ளும் போது, நம் அதரத்திலிருந்து வரும் வார்த்தைகளில் ஜாக்கிரதையிருப்பது மிகமிக அவசியமானதாகயிருக்க வேண்டும்என்பதுதான், உணர வேண்டிய முக்கியமானதாகும்.

எந்த வார்த்தைகளையும் புகழ்ச்சியாகச் சொல்லும்போது



ஏற்றுக்கொள்ளும் மனித மனம். ஆனால் அதே மனம், கோபித்து பேசும்போது வரும் வார்த்தைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனோபாவத்தை நிச்சயம் மறுக்கிறார்கள்.

அதனால்தான் பழைய காலத்தில் 'வஞ்சப் புகழ்ச்சி அணி' என்று இகழ்வதை, வஞ்சமான புகழ்ச்சியாகக் கூறுவார்கள். அதைப் புரிந்துகொள்பவரும் உண்டு. புரியாமல், அந்த வஞ்சப் புகழ்ச்சியை ஏற்றுக்கொண்டு, நிதானமாக யோசித்தப் பின், உள்ளர்த்தத்தை உணர்பவர்களும் உண்டு. அதனால் மனம் சங்கடப்பட்டு, தவிப்பதுதான் மிச்சம்.

அன்னையின் அருளும், அன்னையின் வழியில் சிறிதுகூட மாறாமல் நடந்த அந்தப் பெண்மணிகளின் வாழ்வில், அன்னையின் கோட்பாடுகள் தவிர வேறெதுவுமில்லை. ஒருவருக்கொருவர் இணைந்து, ஒத்துப்போய், ஒன்றுபோல இத்தனை வருடங்களாக இருப்பதும் அன்னையின் அருளால்தான். அதில் எந்த சந்தேகமும் இல்லை.

முக்கியமாக எவரிடமும் பொய்மையும், பொறாமையுமில்லை. ஒருவருக்கொருவர் அன்பைப் பகிர்ந்துகொண்டு, அனுசரணையாக இருந்தபடி... அமைதியான வாழ்க்கையை நடத்தினார்கள்.

அன்னையின் மீதான பக்தி அவர்களுள்ளேயே பொதிந்து இருப்பதால், வேற்றுமை என்பதே அற்றுப்போய், ஓர் உன்னதமான ஒற்றுமையோடு, மனப்பாங்கோடுயிருந்ததால்தான், 'அன்னை'க்காக ஒரு வீடே 'தியானமையமாக' மாறும் அளவிற்கு அன்னை அவர்களுக்குச் செயல்பட்டார்.

**"இது உண்மையான நிதரிசனம்".**

இப்படியிருக்க முடியுமா? அதுவும் பெண்களாகவே, எல்லோரும் இருக்க, எப்படி ஒற்றுமையை அவர்களால் வளர்த்துக்கொள்ள முடிந்தது?

ஒருவருக்கொருவர் உறவோ, சுற்றமோ அல்லர். அப்போது, எப்படி அவர்களால் பாசமும், நேசமுமாகப் பழக முடிந்தது? காரணம்?

அவர்களனைவருக்கும் ஒரே ஆதாரம் அன்னை, ஸ்ரீ அரவிந்தர்தாம். அந்த ஆதாரம் அவர்களுக்கு மனோபலத்தைத் தந்தது. அதே ஆதாரம் அவர்களுக்குள் ஓர் உறுதியான பிணைப்பை

ஏற்படுத்தியது. அந்த ஆதாரமே அவர்களைச் சுற்றி, மிகப்பெரிய ஆதாரச் சுருதியாக வளைய வந்தது. அந்த வளையமே, அன்னையால் பாதுகாப்பு வளையமாக மாறியது.

இப்படியும் நடக்குமாஎன்று கேட்பது காதில் விழுகிறது. இப்படியும் நிச்சயமாக நடக்கும், நடந்துகொண்டிருக்கிறது என்பதுதான் நாம் நம் கண்ணாறப் பார்த்தும், காதால் கேட்பதுமாக இருக்கிற சத்தியம்.

''இப்படியும் நடக்குமா?'' என்கிற கேள்விகளைத் தவிர்த்து, ''நாமும் இப்படி நடக்கலாமே...'' என்கிற எண்ணம் நமக்குள் எழும் வேளையே... நாம் அன்னையை நெருங்க, நமக்கும், அன்னைக்கும் உள்ள இடைவெளிகளைக் குறைக்கும் முதல் அடியாகும்.

எப்போதுமே 'முதல் அடியை' எந்தக் காரியத்திற்கும், எண்ணத்திற்கும் நாம் உறுதியான மனதோடு, தைரியமாக, நம்பிக்கையாக எடுத்து வைத்தோமானால், அடுத்த அடி, அடுத்த அடி என மளமளவென்று வைத்து, நாம் வெற்றிப் பாதையில் நம்மை அறியாமலேயே முன்னேறுவோம்என்பது சத்தியமான நிஜம்என்பது உண்மையாகும். நம்மை அந்த விதத்தில் உணரும்போது ஏற்படும் விந்தையை நம்மால் உணர முடியும், உணர்வோம்.

வீடுஎன்று எடுத்துக்கொண்டால், அதிலிருக்கும் குடும்பத்தினர் எல்லோருமே ஒன்றுபோல இருப்பதுஎன்பது கடினம்தான்.

ஆனால், ஒன்றுபோலிருப்பதுஎன்பதில் ஸ்வாரஸ்யமிருக்காது. உடனே, அப்போது, ஒவ்வொருவர், ஒவ்வொரு விதமான எண்ணங்களுடனிருப்பது சரி வருமா?... அப்போது சண்டை, சச்சரவுகள் வாராதா? என்று நீங்கள் கேட்கத் தயாராகயிருப்பது புரிகிறது.

எண்ணங்களில் பல விதங்கள் இருக்கலாம். இருக்கலாம் என்பதைவிட இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் நல்ல விதமாக பகிர்ந்துகொண்டு, எது நல்லதோ, அல்லது நடைமுறையில் சாத்தியமோ, அதை அனைவரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் இங்கிதத்துடன் நடக்க வேண்டும். அப்போது அங்கு விரிசல் வருமா? யோசித்துப் பாருங்கள்.

இன்று ஒருவரின் யோசனையை ஏற்றுக்கொண்டால், இன்னொரு முறை, மற்றவர் அவரின் பேச்சை ஏற்றுக்கொள்ளும்



பக்குவத்திற்குத் தாமாகவே வருவார். அந்தப் 'பக்குவம்' என்பதுதான், அன்னையை ஏற்றுக்கொண்ட நமக்கு தாரகமந்திரம் ஆகும்.

சமையலிலும், தின்பண்டங்களிலும், 'பக்குவம்' தவறாமல் வெகு உன்னிப்பான கவனத்துடன் எவ்விதம் செயல்படுகிறோமோ, அது போலவே... மற்றவர்களுடன் பேசும்போதும், நடைமுறை வாழ்க்கையிலும் நம் மனோதர்மத்திற்கும், மனோபக்குவத்திற்கும் முக்கியமான இடத்தை நமக்குள் ஏற்படுத்திக்கொள்வதுஎன்பது மிக இன்றியமையாததாகும். அதனால் ஏற்படும் விளைவுகள் நிச்சயமாக நல்லவைகளாகவேயிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

இந்த இங்கிதமும், இணக்கமும், விட்டுக் கொடுத்தலும் இருந்தாலே போதுமே. எல்லாமே நல்லபடியாய் முடியுமே. அந்த விட்டுக் கொடுத்தலும், இங்கிதமும் உண்மையிலேயே சத்தியத்துடன் நடந்ததால்தான் 'அன்னை ஸ்ரீ அரவிந்தருக்காக' ஒரு வீடே வரவேற்று, தியானமையத்துக்காக... தானம் தந்தது. எதிர்பாராத ஒன்று நடந்தது குறித்து அனைவரின் மனமும் ஒன்றுபட்டு, அந்த தியானமையம் வெகுவேகமாக எல்லோராலும் அறியப்பட்டதுதான் நிதரிசன உண்மையானது.

❀❀❀

அன்னம்மா விடியற்காலையிலெழுந்து தியானமையம் சென்றாள். எப்போதும்போல் வாசலைப் பெருக்கி, தண்ணீர் தெளித்து, கோலம் போட்டாள். உள்ளே சென்று, என்றும்போல் விழிகளை மூடியவள், அன்னையின் உலகத்திலேயே லயித்துவிட்டாள்.

அன்னம்மா படிப்பறிவில்லாதவள். மிகமிக சாதாரணமான குடும்பம்தான். குடிகார மகனை திருத்த முடியாமல் கஷ்டப்படுபவள் தான். ஆனாலும் அனுசரணையான மருமகளும், பேரக் குழந்தைகளுமாக, சந்தடியில்லாமல்தானிருந்தார்கள். தினமும் தியானமையம் போய், தியானம் செய்யத் தவறுவதே இல்லை. அதில் ஒரு நல்லது நடந்ததுஎன்றால், அவ்வப்போது மகனும் தியான மையத்திற்கு வந்ததுதான். அதுவே... மாமியார், மருமகளுக்கு சந்தோஷத்தைத் தந்தது.

'மனித மனம்' என்பது எதை 'வேண்டாம்' என்று கூறுகிறோமோ, அதை உடனே செய்ய வேண்டுமென்ற துடிப்பை

உடனே ஏற்றுக்கொண்டு, அதன்படி நடக்க முயல்வதுதான் 'இயல்பாக' உள்ள தன்மை. அதனாலேயே, பலவிதமான சமயங்களில் நாம் மௌனிப்பது மிகமிக நல்லதாகும். அது தெரிந்தும் மௌனத்தைத் தவிர்த்து, ஒரு கலகத்தை ஆரம்பிக்கும் அளவிற்கு வாயை மிகச் சுதந்திரமாகத் திறந்து, வார்த்தைகளை வெளியேற்றுகிறோம், பின்விளைவுகளைப்பற்றி நினைக்காமல்.

ஆனால், அன்னாம்மாவும், அவள் மருமகளும் அன்னையைப் பரிபூரணமாக, மனதார நம்பி ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். அதனால் வீட்டில் எது நடந்தாலும், உடனே அன்னையை நினைத்து 'சமர்ப்பணம்' செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் 'சமர்ப்பணம்' என்பது, அவர்களுக்குத் தெரிந்த முறையில், அன்னையிடம் அத்தனையையும் கூறுவதுதான். இரு கரம் கூப்பி, கண்களின் இமைகள் மூட, மனதிலிருப்பதை அப்படியே அன்னையிடம் கூறுவார்கள். சின்னதோ, பெரியதோ, சந்தோஷமோ, மனக்கலக்கமோ, எதுவாயிருந்தாலும் 'அம்மா' என்று அழைத்து, அவரவர் மனதிலிருப்பதை அன்னையிடம் கொட்டுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமன்று, அன்னையிடம் சொன்னவுடன், அதோடு அந்த விஷயத்தைப்பற்றி நினைப்பதே இல்லை.

இது பாமரர்களின் மனோபாவம். காரணம், அவர்கள் தாங்கள் கடவுளிடம் வேண்டும்போது, எதைக் கூறினாலும், அந்தச் சமயத்தில் பயபக்தியோடு கொட்டிவிடுவார்கள். பிறகு அதைப்பற்றி நினைப்பது இல்லை. நினைப்பதில்லை என்பதைவிட, நினைக்க நேரமிருப்பதில்லை என்பதுதான் உண்மை. அது, அன்னையின் பக்தர்களுக்கு உகந்ததாகிவிடுகிறது, அவர்கள் அறியாமலேயே.

இப்போதும் அப்படித்தான். அன்னையை வேண்டும்போது, மகனின் வாழ்க்கை சீர்பட, அவன் குடியைத் தவிர்க்கத்தான் வேண்டும்என அன்னம்மா, அன்னையிடம் தன் சங்கடங்களை ஒப்படைத்துவிட்டதில், மனதில் ஒரு நிம்மதியோடு, மற்ற வேலைகளை ஆரம்பித்துவிடுவாள். அதைப்பற்றிய நினைவே அவளைவிட்டு அற்றுப் போய்விடும்.

அதுபோல் நம்மாலிருக்க முடிகிறதா? அன்னையைப் பார்க்கும் போதெல்லாம் மனம் நினைத்ததை புலம்பும், அடங்காது.



முணுமுணுவென மனதில் எப்போதும் ஒரு தொணதொணப்புடன்தான் அன்னையை ஏறிட்டுப் பார்ப்போம்.

''ஏன், அன்னையிடம் நம் கோரிக்கைகளைக் கேட்பது தவறா?''

''யார் சொன்னது தவறுஎன்று? அன்னையிடம் கூறாமல் எவரிடம் கூற முடியும்? தவறே அன்று. ஆனால், நாம் அன்னையிடம் நம் எந்த கோரிக்கையையும் கேட்கலாமே. எதுவானாலும் தைரியமாக அன்னையிடம் கேட்கலாம். கேட்பதோடு நம் கடமை முடிந்ததுஎன இருக்க வேண்டும். சின்னஞ்சிறு குழந்தை பெற்றவர்களிடம் தாம் வேண்டியதைக் கேட்டு அடம்பிடிப்பது போல நடக்க வேண்டியது சரியா? பெற்றவள் எப்படித் தன் குழந்தைகளுக்கு எவ்வெப்போது, என்னென்ன தேவைஎன்று கவனித்துச் செய்வாரோ, அது போலத்தான் அன்னையும் நமக்கு அந்தந்த வேளையில் தேவையானதைத் தாமாகவே தந்து பிரமிக்க வைப்பார். நிதரிசனத்தில் இது கண்கூடு''.

❀❀❀

தியானமையம் இப்போது, தியான நேரத்தில் நிறைய பேர் வரத் தொடங்கியதால், வெளியிலிருந்த இடத்திலும், மேலே வெயிலும், மழையும் உணராமலிருக்க சுவரெழுப்பி, அதன் மேல் மொட்டை மாடி போல் கட்டடம் எழுப்பியாயிற்று. கட்டடம் எழும்பும்போதே பலர் உதவ விரும்பி பணம் கொடுத்தபோது, சத்தியனுக்கும், மாமாவிற்கும் கண்கள் துளிர்க்க, அன்னை, ஸ்ரீ அரவிந்தரை சாஷ்டாங்கமாக வணங்கினார்கள்.

ராமுவும், சீனுவும் தவிர, வந்த அன்னையின் பக்தர்கள் தாங்களாகவே மனமுவந்து பல வேலைகளைக் கூடமாட செய்தார்கள். அதனால் நினைத்ததைவிட சீக்கிரமாகவே கட்டி முடிக்கப்பட்டது. ஒரு பெரிய 'கூடம்' போல், சுமார் ஐம்பது பேர் உட்காரும் அளவிற்கு இருந்த இடத்தைப் பற்றி, அன்னையின் பக்தர் ஒருவர் சத்தியனிடம் பேச வேண்டுமென்றார். சத்தியன், மாமாவையும் அழைக்க, இருவருமாய் அந்த அன்னையின் பக்தரை ஆபீஸ் ரூமிற்குள் சென்று அமர வைத்தனர்.

அப்போது அந்த பக்தர் கூறியது:

''எனக்கு இந்த தியானமையத்திலேயே எப்பவும் இருக்கணும் போல் தோண்றது. நானும் உங்களோட சேவை செய்யணும்னு மனசு

ரொம்பயிருக்கு. ஆனா, இன்னும் சில கடமைகள் எனக்கு இருக்கு. அதை முடிச்சுட்டுத்தான் வரணும். என் கடமையை முடிக்காம வர்றது அன்னைக்கு உகந்ததல்லன்னு எனக்குப் புரியறது. ஆனா, ஏதாவது செய்யணும், நானும் பங்குகொள்ளணும்னு மனசு துடிக்கிறது. அதனால... அதனால...'' தயங்கினார் மேலே பேச்செழாமல்.

''சொல்லுங்கோ... என்ன சொல்லணுமோ சொல்லுங்கோ. தயங்கவே வேண்டாம். எதுவானாலும் சொல்லுங்கோ...'' சத்தியன் கூறவும், அந்த பக்தர் கூறியது கேட்டு, பிரமித்தேபோயினர்.

ஆமாம், அவர் கூறியது: ''எனக்கு, எனக்கு... இப்ப கட்டியிருக்கிற இந்த இடத்துக்கு 'கிரானைட்' போட்டுத் தரணும்னு ஆசைப்படறேன். செய்யலாமா? அதற்கான செலவு முழுக்க நானே ஏத்துக்கணும்னும், அதுக்கு அன்னைகிட்டவே வேண்டிண்டேன். அப்புறமாத்தான் உங்ககிட்ட சொல்றேன். நான் சொன்னதுல ஏதாவது தப்பிருந்தா...'' மேலே பேச்சு வாராமல், கண்கள் துளிர்க்க, இரு கரம் கூப்பி நின்றவரை, சத்தியன் ஆசுவாசப் படுத்தினார். அவரை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்.

மூவருமாய், அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படத்தின் முன் நின்று, பிறகு அங்கேயே அமர்ந்தனர். தியானம் செய்ய ஆரம்பித்தனர்.

இதில் நடந்தது, அவர்களே அறியாமல் ஒன்றுபோல அமர்ந்தவர்கள், அன்னை, ஸ்ரீ அரவிந்தரின்முன் சம்மணமிட்டு அமர்ந்ததுதான் தெரியும். அதன் பிறகு அவர்களிடம் எந்த அசைவுமின்றி தியானம் அவர்களை ஆக்ரமித்தது.

அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் அவர்களையே பார்ப்பது போன்று தோன்ற, மற்றவர்களும் துளிக்கூட சத்தமின்றி அமர்ந்து, அந்த அற்புதமான தியானத்தில் தாங்களும் சேர்ந்தனர்.

தியானம் முடிந்ததும் துளிக்கூட சத்தமின்றி எழுந்து சென்றார்கள் மற்றவர்கள். இவர்கள் மூன்று பேரும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரை வணங்கியபின், ஆபீஸ் ரூமுக்குள் சென்று அமர்ந்தனர். சில வினாடிகள் அமைதியாகவேயிருந்தனர். சத்தியனைப் பார்த்து, அந்த பக்தர் மீண்டும் பேசினார்.

''நான் இன்னும் கொஞ்சம் பேசணுமே... தியானத்தின்போது தான் ஒரு மின்னல்கீற்றுப்போல் அந்த எண்ணம் வந்தது, சொல்லலாமா?''



''சொல்லுங்கோ... அன்னையோட தியானத்துல வந்த மின்னல் எண்ணம், நிச்சயமா உங்க வாழ்க்கையையும் சுபிட்சமாக்கும். தயங்காம சொல்லலாம்... ம்...''

''கீழே இந்த ஹாலுக்கு 'கிரானைட்' போட்டுத் தர அன்னையோட அனுமதி கிடைச்சுருக்கு. இப்போ இன்னொண்ணும் தியானத்துல தோணித்து. அன்னையோட சம்மதமில்லாம எனக்கு வந்துருக்காது. அதனாலதான் சொல்றேன். இப்ப மொட்டை மாடி கட்டியிருக்கு இல்லை, அதற்கு மேலே 'ஆஸ்பெஸ்டாஸ்' வேண்டாமே, நல்ல கட்டிடமாவே பண்ணிடலாமே... தரையிலயும் கிரானைட் போட்டுடலாம். எத்தனை செலவானாலும் பரவாயில்லே. 'அன்னை' நான் ஏத்துக்க அனுமதி தந்திருக்கிறதாலேதான் சொல்றேன். தப்பா நினைச்சுக்கக் கூடாது, சரியா? ஆனா, இந்த விஷயம் நமக்கும், அன்னை, ஸ்ரீ அரவிந்தருக்கும் மட்டும் தெரிஞ்சா போதும்''.

பவ்யமாகப் பேசும் அவரின் உணர்வுபூர்வமான பேச்சில், அவரின் சத்தியம் தெரிந்தது, பக்தி புரிந்தது, அடக்கம் பிரமிக்க வைத்தது. அந்தப் பண்பு அவர்களை உடனே ஒத்துக்கொள்ளவும் செய்தது. உடனே ஆமோதிக்கவும் தூண்டியது.

மளமளவென தியானமையம் மாடியிலும் அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அமர, வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க, விசாலமான இடம் வெகுஅழகாக அமைந்தது. மாடியிலும் அன்னை, ஸ்ரீ அரவிந்தர் தெய்வீகமான சுடருடன், கண்களில் கருணை ததும்ப, எல்லோரையும் வரவேற்று அருள்புரிந்தனர் என்றால் மிகையாகாது.

அன்னம்மாவின் மகன், அன்னம்மாவோ, மனைவியோ சொல்லாமலேயே தியானமையத்திற்குத் தனக்குத் தோன்றிய போதெல்லாம் போனான். சில சமயம் அன்னம்மாவிற்குத் தெரிந்தது. பல சமயங்களில் அவளுக்குத் தெரியாது. ஆனாலும் எப்போதும் போல், அவள் வாசல் பெருக்குவதும், பூக்களைத் தருவதுமான தன்னுடைய இயல்பான வாழ்க்கையில் மாற்றமேயில்லாமலிருந்தாள்.

மருமகளும், பேரக் குழந்தைகளும் முடிந்தபோதெல்லாம் தியானமையத்திற்குப் போவதை வழக்கமாகக்கொண்டனர். அதுவும் 'முதல் தேதி' மாதாமாதம் போவதை மட்டும் தவறாமல் செய்தனர்.

அன்னம்மாவின் மகன் அன்று, இரண்டு பேர் பிடித்து வர, வீட்டிற்கு வந்தவனை, கண்கள் அகல, பயத்தோடு மாமியாரும்,

மருமகளும் ஓடி வந்து பிடித்தபடி வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர். அழைத்து வந்தவர்களுக்கும் நன்றி கூறினார்கள். அதிகம் குடித்துவிட்டதால் அவனால் நடக்க இயலவில்லை.

துவண்டு, சோர்ந்துபோனவன், வாய் திறந்து பேச முடியாதபடி களைத்து, படுத்தவன், தன்னையறியாமலேயே அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் படத்தையே பார்த்தவன், இரு கரம் கூப்பி வணங்கியவன், வாய்விட்டுக் கதற ஆரம்பித்தான்.

''முடியலே... என்னால முடியலே... தப்பு பண்ணிட்டேன்... தப்பு பண்ணிட்டேன்... அம்மா... என்னை மன்னிச்சுடும்மா... ம்மா... முடியலயே... இனிமேல்பட்டு... அந்த இடத்துக்குப் போகவேமாட்டேன். என்னை நம்பும்மா... அம்மா... தாயே... அன்னையே... என்னை நம்பு... ம்மா... ம்மா...'' அப்படியே மயங்கியேபோனான்.

அன்னம்மா மகனை தன் மடியில் இருத்தி, 'அன்னையே சரணம்' சொல்லியபடி மகனின் சரீரம் பூராவும் தடவிக் கொடுத்தாள். மருமகளோ... அன்னைக்கு உடனே ஊதுவத்தி ஏற்றி, வேண்டியவள், சம்மணமிட்டு அமர்ந்தேவிட்டாள். 'அன்னையின் சரணம்' மட்டுமே அவளுள் புகுந்து, ஆக்கிரமித்தபடியால், எந்தவிதமான இடையூறும் இல்லாமல் 'தியானம்' தீவிரமாகயிருந்தது. கலைந்து எழுந்தபோது, அவள் கணவன் வலி குறைந்து தூங்கியேபோயிருந்தான்.

''நல்ல குணத்தைப் பல உயர்ந்த கட்டங்களாகப் பிரித்து, மனிதர்களை நிர்ணயிப்பதுபோல், அன்னையிடம் உள்ள ஈடுபாட்டை அளவீட்டிற்குள் கொண்டு வர முயல்வது திட்டவட்டமான பலன் தாராது. பக்திக்கு அளவில்லை, அதனால் அளவீடும் இல்லை. அது இறைவனுக்கும், நமக்கும் இடையேயுள்ள பவித்திரமான தொடர்பு. கணக்கில் அகப்படக்கூடியதில்லை''.

எத்தனை அனுபவபூர்வமான, அறிவுபூர்வமானவைகள். 'ஆத்ம சோதனை' என்னும் புத்தகத்தில் 'பத்து கட்டங்கள்' என்னும் கட்டுரையிலிருந்து எடுத்து எழுதியது.

பத்து கட்டுரைகளாக எழுதப்பட்டுள்ள இந்தப் புத்தகத்தில் இருக்கும் ஒவ்வொரு கட்டுரையும் வாழ்வின் நிதரிசனத்தில் நம்மை எந்த நேரத்திலும், எந்த விதத்திலும் பக்குவப்படுத்துவதாகும். இதை நாம், நிச்சயமாக உணர முடியும் என்பதே இந்த புத்தகத்தின் சாராம்சம்.



இந்த புத்தகத்தின் பொருளடக்கத்தைப் படித்தாலே நமக்கு கட்டுரைகளைப் படிக்கத் தூண்டும். காரணம் மனித மனத்திற்கு மிகமிகத் தேவையானவைகளே, மிகவும் அழகாக, மனதில் பதியும்படியாக எளிய முறையில் எழுதப்பட்டுள்ளது, நமக்காகத்தான். ஆம்... பாமரர்களான நமக்கேதான்.

கட்டுரைகளின் ஆரம்பமே '**விவேகத்தில்**'தான். அதன்பின் அந்த விவேகத்தை எப்படி '**பாகுபாட்டோடு**' நடத்த வேண்டுமென்பதே. அப்படி நடந்தால் நம்மைத் '**தேடி வரும் அதிர்ஷ்டம்**'. '**ஜாதகம்**', இது ஏன்? தேவையேயில்லை. அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் நம்முடன் இருக்கையில் '**ஜாதகம்**' என்பதை மறுக்கலாம், மறக்கலாம். '**நினைவும், செயலுமே**' நிச்சயம் ஒன்றுக்குள் ஒன்று தொடர்பு உடையவை. அதனால்... நம் 'நினைவும், செயலும்' ஆன்மீகத்தில் அன்னையின் கோட்பாடுகளுடன் நடப்பதுதான் '**பாதுகாப்பு**'. அன்னையின் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு நடப்பவர்களுக்கு 'பாதுகாப்பு' கவசமே கிடைக்கும். '**கடந்த கால நினைவுகள்**', இது யாருக்குத்தான் இல்லை? அதைப் பற்றிய கட்டுரை நமக்கு மிகவும் தேவை. '**உறவும், உணர்வும்**' நம் மனிதர்களுக்கு மிகமுக்கியமானது. '**பத்து கட்டங்கள்**' படித்து, உணர்ந்து, நடக்க வேண்டியது. கடைசியில் '**ஆத்ம சோதனை**'. சத்தியத்தில் இது நமக்கு மிகமிகத் தேவையானது, உகந்ததுமாகும். நம்மை நாமே புடம்போட்டு புனிதப்படுத்திக் கொள்வதாகும்.

இவை அனைத்தும் எழுதுவதும், படிப்பதும் மிகமிக சுலபம். ஆனால் நடைமுறையில்? ஆம், கேள்விக்குறிதான். ஆனால் அன்னை, ஸ்ரீ அரவிந்தரை ஏற்றுக்கொண்ட நம்மால், ஆம், அன்னையின் பக்கபலத்தால், ஆசிகளால் நம்மை நாமே சரிப்படுத்திக்கொள்ள முடியும்என்பது சாத்தியமே. இதை மனமுவந்து, மனப்பூர்வமாய் நாம் ஏற்றுக்கொண்டு நடந்தால், நம் வாழ்க்கையின் உன்னதம்... நமக்கே... ஆம், நமக்கே ஆச்சரியமான மகிழ்வைத் தரும்என்பது சர்வ நிச்சயம்.

❀❀❀

அன்னம்மாவின் மகன் இந்த முறை ரொம்பவுமே குடியினால் குடல் வெந்து, மிகவும் அவஸ்தைப்பட்டுவிட்டான். அன்னம்மாவும், மருமகளும், அவரவர் மனதிற்கேற்ப அன்னையை வேண்டுவதே

தங்கள் கடமைஎன்பதுபோல் ஊதுவத்தி ஏற்றி, மாறி, மாறி, நோயுற்றவனைப் பார்த்துக்கொண்டு, தியானமையத்தின் தியானத்திலும் தவறாமல் கலந்துகொண்டு, அங்கிருந்து பூக்களை எடுத்து அவன் வயிற்றின் மேல் பயபக்தியோடு வைத்தார்கள்.

நீர்த்தப் புழுங்கலரிசி கஞ்சிதான் அவன் வயிற்றுக்கு இதமாக இருந்தது. அதையே கொடுத்தார்கள். சத்தியன் விஷயத்தையறிந்து, அவனை வந்து பார்த்தவர், தம் காரை எடுத்து வந்து, அவனைக் குழந்தைபோல் தூக்கி, பின்னால் ஸீட்டில் படுக்க வைத்து, அவன் மனைவியையும் கூட அழைத்துக்கொண்டு, டாக்டரிடம் காட்டி, அவர் ஆஸ்பத்திரியிலேயே ஒரு வாரம் இருக்க வேண்டுமென்றதும், சரி என அட்மிட் செய்தார். சிகிச்சையும் அன்றே ஆரம்பித்தாயிற்று. அன்னையின் அருளால் அவனுடைய வயிற்றில் புண்கள்தானே தவிர, கேன்சரில்லைஎன ரிஸல்டில் வந்தது அனைவருக்கும் கொஞ்சம் நிம்மதியாயிற்று. சிகிச்சையும் ஆரம்பித்தாயிற்று.

அன்னம்மாவும், மருமகளும் மாறி, மாறி ஆஸ்பத்திரியில் இருந்தாலும், சமயம் வாய்த்தபோது, தியானமையத்துக்குப் போய் பிரார்த்திப்பதை மட்டும் விடாமல் தொடர்ந்தனர். அன்னையிடமே மகனை ஒப்படைத்துவிட்ட மனோபாவம் அவர்களிருவரிடமும் இருந்ததால், வேண்டும்போது, மனம் முழுவதும் அன்னையின் நினைவுகளால் நிரம்பி, வேண்டினர். பிறகு, அன்னையிடம் கூறிவிட்ட நிம்மதியில், வேலைகளைக் கவனித்தனர். சஞ்சலம் என்பதே அவர்களிடம் இல்லை.

'அன்னையிடம் கூறிவிட்டோம். அன்னை பார்த்துக்கொள்வார்', இந்த நம்பிக்கைதான் அவர்கள் மனம் முழுவதும் நிரம்பியிருந்ததில், எந்தவிதமான கிலேசமுமின்றி அன்றாட வேலைகளை செய்வதில் ஈடுபட்டனர்.

இது பாமரர்களுக்கே உரித்தான மனோபாவம். ஆம், அன்றாடம் வேலை செய்து பிழைக்கும் அவர்களின் மனம், எந்தத் தெய்வத்தை வேண்டுவதானாலும், அவர்களுக்குக் கிடைக்கும் நேரத்தில், அதுவும் அந்த நேரத்தை வீணாக்காமல், மனம் நிறைந்து, கனிந்து, உருகி வேண்டுவதால், அது உடனே சேர வேண்டிய இடத்தில் சேர்ந்துவிடுகிறது. அதன் பிறகு அவர்களின் அன்றாட வேலைகளில் மூழ்கிவிடுகிறார்கள். ஆனால்... நாம்... ஹும்...



அதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வருமா? நம் மன உளைச்சலையே நம்மால் தள்ள முடிவதில்லை. அதனால், நம் வேண்டுதலை, வேண்டும் தெய்வத்திடமே விடாப்பிடியாக தொந்திரவு செய்து துளைத்து எடுத்துவிடுகிறோம். அப்போதும் நம் மனம் அடங்காமல், நம்மைத் துளைத்து, புரட்டுகிறது. 'வேண்டுவதை அன்னையிடம் ஒப்படைத்து விட்டோம், இனி அன்னையின் பொறுப்பு' என நம்மால் இருக்க முடியாமல், ஒரு உளைச்சல் சதா மனதில் வைத்துக்கொண்டு, கஷ்டப்படுவது சரியா? இல்லை எனத் தெரிந்தாலும், புரிந்தாலும்... ஊஹும்... நம் மனதை நம்மாலேயே அடக்க முடியாமல், அதன் போக்கில் விட்டுவிடுகிறோம். அதனால் நம்முள் ஏற்படும் பலவித வேண்டாத எண்ணங்கள், யோசனைகள், அதற்கான வழிகள் எங்கே, எங்கே எனத் தேடித் துளைக்கும் மனதுள் நிம்மதி ஏற்படுகிறதா? வழி கிடைக்கிறதா? யோசனைகள் முற்றுப்பெறுகிறதா? ம்...ஹும்... இல்லை. எதுவுமே நமக்குக் கிடைப்பதில்லை என்பதுதான் நிஜம். சத்தியத்தின் உருவான நம் அன்னையின் அருகாமையை விட்டுவிட்டு, அன்னையின் முன்னிலையில் அமர்ந்து தியானம் செய்யும் நம் மனதில் எத்தனை தனித்தனியான பிரிவுகள், வெவ்வேறு வழிகளில் செல்கின்றன? ஒன்றுக்கொன்று சந்திப்பதேயில்லையே. 'நாம் எதைத் தேர்ந்தெடுப்பது? எதை விடுவது?' இந்த இரண்டு கேள்விகள் மட்டுமே நம்மிடம் மிச்சமாக உச்சத்திலிருக்கிறது. பதில்!! ஆச்சரியக்குறிதான்!

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வேலையின் இரு பகுதிகள் இணைந்து செயல்பட ஒவ்வொன்றும் தன்னுள் முறையான அமைப்பை முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும்.

***இருப்பவை சரியாக இருந்தால் இணைந்து செயல்படலாம்.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

**(22) அடுத்தவர் கோணத்தில் விஷயத்தைப் புரிந்துகொள்வது.**

✡ அடுத்தவர் கோணத்தில் புரிவது ஆண்டவனைப் புரிவதாகும்.

✡ அதற்கு அடையாளம், அவர் நம் மனத்திலுள்ளதைப் பேசுவதாகும்.

✡ சிருஷ்டிஎன்பது ஒன்று பலவாகி, பல ஒன்றோடு ஒன்று உறவாடுவதாகும்.

All is in each, each is in all என்பது தத்துவம். அதன்படி உலகிலுள்ள அனைவரும் என்னுள் உள்ளனர். நான் அனைவரிலும் வதிகிறேன். எனவே ஒவ்வொருவரும் என்னுள் உள்ளனர். நான் அனைவரிலும் வதிகிறேன். எனவே ஒவ்வொருவரும் உலகிலுள்ள அனைவருடனும் உறவாடிப் பெறும் இன்பம் என்னுடையது.

✡ *அடுத்தவர் கோணத்தில் புரிவது ஆரம்பம்.*

✡ அடுத்தவர் கோணத்தின் மகிமையை பீர்பால் அக்பருக்கு உணர்த்தினார். அரண்மனை பெருக்குபவன் முகத்தில் விழித்ததால் அன்று பல தொந்தரவுகள் வருகிறதுஎன அவனைச் சிரச்சேதம் செய்ய உத்தரவிட்ட சக்ரவர்த்திக்கு பீர்பால், "அரசன் முகத்தில் விழித்ததால் அவன் தலை போயிற்று" எனக் கூறினார்.

✡ ஒரு ரிஷி உலகின் - உலகில் உள்ள அனைவரின் - கருத்தை அறிந்தால், அவர் அக்கருத்தை மாற்ற முடியும். நெடுநாள் பலன் க்ஷணத்தில் வரும். சாவித்திரியில் ஒருவனுடைய சிறப்பு உலகை உய்விக்கும்என்பது அதுவே.

✡ அடுத்தவர் கோணம் புரிவது ஆரம்பம்.

நம் கருத்தை அவர் கூறுவது அதற்கு அடையாளம்.

நம் கருத்தை அவர் ஏற்பது அடுத்தது.



தன் தீவிரமான கருத்தை, நம் கருத்தை ஏற்று, மாற்றுவது பெரியது.

ஒருவரிடம் பெற்ற அனுபவம் பலரிடமும் பெறுவது.

அடுத்தவரின் அனைத்துக் கருத்தும் தெரிவது, மேலும் ஒரு படி.

உலகம் நம் கருத்தை வெளியிடுவது.

உலகம் நம் கருத்தை ஏற்றுச் செயல்படுவது.

*எவ்வளவு நாளானாலும் என் கருத்தை உலகம் செயல்படுத்தத் தவறியதில்லைஎன பகவான் கூறுகிறார்.*

உலகுக்கு முக்கியமானவர் நம் கருத்தை ஏற்று, செயல்பட்டால், நம் மனம் பிரபஞ்ச மனமாகிவிட்டதுஎனப் பொருள்.

இது ஜீவியத்தில் நடப்பது, மேல்மனத்தில் நடப்பது.

இதுவே அடிமனத்தில் பொருளில் நடக்கும்.

ஏதாவது ஒரு விஷயம் இப்படி நடந்தால், நமக்கு யோகம் பலிக்கும்.

நமது ஆசையை உலகம் பிரதிபலிப்பதும், நம் கருத்தை உலகம் ஏற்பதும், நம் மனத்திற்குத் தெளிவாகப் புரியும்.

ஆசை பிரதிபலிப்பதும் அர்த்தமுள்ளதேயாகும்.

அகம் புறத்தைப் பலிப்பதில் 3 கட்டங்கள் உண்டு.

1. நம் மனம் சூட்சுமமாக இருப்பதால், அது உலக நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கிறது.
2. நம் மனம் வலுவாக இருப்பதால், அது உலகை மாற்றுகிறது.
3. இடைப்பட்ட நிலை.

✡ அடுத்தவர் கோணத்தில் நாம் விஷயங்களைப் புரிந்து கொண்டால் நம் வாழ்வு பெரியதாகும், இருவர் வாழ்வும் சேர்ந்த அளவு விரிவடையும். பலர் கோணத்திலும் உலகம் நமக்குப் புரிந்தால் பலரும் நம்மை ஏற்பர். நம் வாழ்வு பலர் வாழ்வு அளவு பெரியதாகும்.

✡ அடுத்தவர் கோணத்தில் புரிவதைச் செயல்படுத்தினால், அவர்கள் முழுஆதரவு நமக்குக் கிடைக்கும்.

- ✡ **உலகை ஆள விரும்புபவன் உலகிலுள்ள அனைவர் கோணத்திலும் விஷயங்களைப் புரிந்து, அதன் முரண்பாடுகளை உடன்பாடாக்கி, அவ்வுடன்பாட்டை மனதால் செயல் படுத்தலாம். அது அவருக்குத் தலைமையைப் பெற்றுத் தரும்.**
- ✡ **தலைமையின் அளவு மனத்தின் அளவாக இருக்கும்.**

**(23) ஆன்மா வளரும்பொழுது பரிணாமவளர்ச்சி பெறுவது ஆயுளை நீடிக்கும்.**

- ➙ **பிறவிச் சூழலினின்று விடுபட்டு மோட்சம் பெறுவது தவம்.**
- ➙ **பிறவியைத் தவிர்த்து, வாழ்வை அன்னை வாழ்வாக்குவது யோகம்.**

அந்த நாளில் ஊரில் பேங்க் இருக்கும். ஏழைக்கு அங்கு வேலையில்லை. அவனுக்கு எதுவும் தெரியாது. இந்த நாளில் பேங்க் அவனைத் தேடி வந்து கடனுதவி செய்து, முன்னுக்குவர உதவுகிறது. சிறிய ஊர்களில் பேங்க் இருப்பதில்லை. இன்று எல்லா கிராமங்களுக்கும் பேங்க் வந்துவிட்டது. அன்று அன்னையிருந்தார். இந்தியாவிலேயோ, தமிழ்நாட்டிலோ அவரை அறியாதவர் ஏராளம். *அன்னையைப் பற்றி அறிவது அதிர்ஷ்டம். அது பலருக்கில்லை.* இன்று தமிழ்நாட்டில் அன்னையை அறியாதவரில்லை. அன்னையை அறிந்து, அன்பராவது முதல் நிலை. அன்னையின் அம்சங்களையறிந்து, அவரை ஏற்று, பூரணயோக வாயில் திறப்பது முடிவான கட்டம் ஆரம்பிப்பது ஆகும். பூர்வஜென்மத்தில் அன்னையுடனிருந்தவரே இன்று அவருடன் வாழ்ந்தனர். இது பெறற்கரிய பேறு. இதனால் அது நீடிக்கும்எனக் கூறமுடியாது. காந்திஜீயின் சந்ததிகளைப் பற்றி நாம் இன்று கேள்விப்படுவதில்லை. *புண்ணியத்தின் பலனை ஏற்றுப் போற்றலாம். அதை அத்துமீறிப் பயன்படுத்தலாம்.* அப்படிப் பயன்படுத்தினால் 'குன்றும் மாளும்', அதுவும் கரையும், எதிராகவும் மாறும். பூரணயோக வாயில் திறக்கும் அறிகுறிகளில் ஆன்மா வளரும்பொழுது, உடலும் வளர்வது ஒன்று. உடலுக்குரிய தகுதி முடிந்தபின் ஆத்மா அடுத்த உடலை நாடுவது மரணம். ஆத்மா வளரும்பொழுது உடலும் வளர்ந்தால் மரணமில்லை. சிறுவயதில் காய்ச்சல் வந்தால், தானே போகும். வயதானபின் ஒரு வாரம், 10 நாட்கள் படுக்க வேண்டும்.



வயதானபின் காய்ச்சல் வந்து, நாம் கவனிக்காவிட்டால், தானே சிறுவயதில் போவதுபோல் போனால், உடலில் தெம்பிருக்கிறதுஎனப் பொருள். ஆன்மா வளரும்பொழுது உடலும் வளர்ந்தால், பூரணயோக வாயில் திறக்கும், தெம்பு வளர்வது காட்டும். இதை ஒரு சௌகரியமாக எடுத்துக்கொள்வதைவிட, இதை அன்னை நமக்கு யோக அழைப்பு அனுப்புகிறார்என அறிதல் நன்று. 10 வேளைக்கு டாக்டர் மருந்து கொடுத்தால், ஒரிரு வேளைகளில் உடல் குணமாவதும் இது போன்றதே. காயம் ஆற ஒரு வாரம் ஆகும் என்றபொழுது, 5 நாளில் ஆறுவதும் உடல் விழிப்பாக இருக்கிறது, ஆன்மா வளரும்பொழுது உடலும் வளர்கிறது, பூரணயோக வாயில் திறக்கிறது, அன்னை யோகத்தை மேற்கொள்ள நம்மை அழைக்கிறார்எனப் பொருள்.

- ✡ **பொதுவாக இது அன்பர்கள் கண்ணில் படுவதில்லை.**
- ✡ **கண்ணில்பட்டு, மனம் ஏற்று, அழைப்பை ஏற்றுக்கொள்வது, அன்னையை பூரணமாக ஏற்பதாகும்.**

**(24) நாம் செய்யும் வேலை ஜடஉலகினின்று நகர்ந்து, சூட்சுமத்தைத் தாண்டி, சத்தியஜீவிய உலகையடைவது.**

- ➙ **எதிரி நமக்குச் சாதகமாக மாறுவது.**
- ➙ **அறிவில்லாமல் அடமாகச் செய்யும் காரியமும் கூடி வருவது.**

செயலுக்கு மூன்று நிலைகளுண்டு. கையால் செய்யும் வேலை ஜடஉலகைச் சார்ந்தது. உணர்ச்சியால் செய்வது சூட்சுமலோகச் செயல். ஆத்மாவால் செய்வது சத்தியஜீவியச் செயல்.

***அருள் செயல்படும்பொழுது, யோகவாயில் திறக்கும்.***

***அது அன்னையின் அழைப்பு.***

***அப்பொழுது கையால் செய்யும் வேலை தானே***
***சத்தியஜீவியச் செயலாக மாறும்.***

மருத்துவக் கல்லூரியில் படிக்க பண வசதியில்லாதவன் ஆசையின்பேரால் விண்ணப்பம் போடுவது, கையால் செய்யும் ஜட வேலை. அவனுக்கு இடம் அளித்து வரச்சொல்வது, செயல்

சூட்சுமமாகியதைக் காட்டுகிறது. கல்லூரியில் சேர்ந்தபின், எப்படி தனக்கு இடம் கிடைத்ததுஎன விசாரித்தால், அவன் பிறந்த ஊரில் பட்டதாரிகளில்லைஎன்பதால் அவனுக்கு இடம் கொடுத்து, ஸ்காலர்ஷிப் கொடுத்தார்கள்என்பது தெரிய வருகிறது. முதல் ஆண்டு, அமெரிக்க புரொபசர் வந்து மாணவர்களை சந்தித்த பொழுது, இவனைத் தேர்ந்தெடுத்து, படிப்பை முடித்தபின் அமெரிக்காவுக்கு அழைப்பது சத்தியஜீவியச் செயல்.

✡ *இது போன்ற நிகழ்ச்சிகளை நாம் அன்பர்கள் வாழ்வில் அடிக்கடி கேள்விப்படுகிறோம்.*

✡ அதை வசதியாக, அதிர்ஷ்டமாக ஏற்கலாம்.

✡ யோக அழைப்பாக ஏற்பது முறை.

✡ யோகத்திற்கு அன்னை அழைப்பதில்லை.

✡ தானே வருபவர்களை "இது சரி வாராது" எனக் கூறி அனுப்பி விடுவார்கள்.

✡ அன்னை யோகத்திற்கு அழைப்பது லால்பகதூர் சாஸ்திரியை பிரதமராகும்படி அழைத்ததைப்போல். அடுத்தது இந்திராவுக்கு அவ்வழைப்பு வந்தது.

✡ அன்றிலிருந்து இன்றுவரை இராஜாஜி தவிர எவரையும் முதல் மந்திரியாகவோ, பிரதமராகவோ அழைக்கவில்லை.

✡ எந்த நாட்டிலும் அது நடக்கவில்லை. சாஸ்திரியும், இந்திராவும் அன்னைதரிசனம் செய்தவுடன் அவ்வழைப்பைப் பெற்றனர்.

✡ இராஜாஜிக்கு அந்த அழைப்பு வந்தது, அவர் ஏற்கவில்லை. பிறகு சுப்ரமணியம் அவரை ஏற்கும்படிக் கேட்டுக்கொண்டதால், ஏற்றார். சுப்ரமணியம் பிறகு அன்னைக்குச் சேவை செய்தவர்.

✡ சர்ச்சிலை அப்படி அழைத்ததற்கு பகவான் சக்தி செயல்பட்டது காரணம்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# கடமையில் வெளிப்படும் பண்பு

*Pride and Prejudice* கதையில் லிடியா ஓடிப்போகிறாள். டார்சி எவருமறியாமல் அவளைத் தேடிக் கண்டுபிடித்து விக்காமைக் கண்டித்து அவளை மணக்கச் செய்து, உள்ள இராணுவ வேலையை இராஜினாமா செய்யச் சொல்லி, பணம் கொடுத்து வேறு இராணுவ வேலையை வாங்கிக் கொடுக்கிறான். விக்காம் பட்ட கடன்களை £1000க்கு மேற்பட்டவை அடைக்கிறான். லிடியாவுக்கு £1000க்கு எழுதி வைக்கிறான். £3000 கொடுத்து வேலை வாங்குகிறான். ஆக £5000 செலவாகிறது. இது டார்சி கடமையில்லை. Mr.பென்னட் கடமை. அவரிடம் £50 கூட இல்லை. Mr.கார்டினர் சோதரி மகளுக்குக் கொடுக்க ஆசைப்படுகிறார். கடமையென உணர்கிறார். டார்சி இது தன் பொறுப்புஎன மறுத்துவிடுகிறான். பென்னட்டிடம் கார்டினர் பணம் தான் கொடுத்ததாகக் கூற வேண்டியபொழுது *அவர் மனச்சாட்சி உறுத்துகிறது.* லிடியா மூலம் விஷயம் வெளி வந்து எலிசபெத் மாமியிடம் கேட்டபொழுது கார்டினர் சந்தோஷப்படுகிறார். தான் செய்யாத வேலைக்கு நல்ல பெயர்பெற அவர் மனம் சம்மதிக்கவில்லை. உண்மை எலிசபெத்திற்கு தெரிந்ததுபற்றி அவர் திருப்திபடுகிறார்.

***மனம் தூய்மையானது.***
***இல்லாத பெருமைக்கு ஆசைப்பட மறுக்கிறது.***

டார்சி எலிசபெத்தை மணக்கும்படிக் கேட்டபொழுது அவர் தாயார், மாமா ஆகியவரை இழித்துப் பேசுகிறான். அவர்களிடம் அவன் பேசக்கூடமாட்டான். எலிசபெத் திட்டியதால் மனம் மாறி, பெம்பர்லியில் எலிசபெத்தை மாமா, மாமியுடன் சந்தித்து அளவளாவி, அவளை மணம் புரிந்து,

*கார்டினர், அவர் மனைவியை பெம்பர்லிக்கு உரியவராக ஏற்றுக்கொண்டது,*

கார்டினர் கடமையை உணர்ந்து பண்போடு நடந்ததால்என நாம் அறிகிறோம்.

❀❀❀

# பலன் கருதாத பெருந்தன்மையான பண்பு

ஓவன்என்பவன் 30 வயது இளைஞன் £800 பவுன் வருமானமுள்ள பிரபு. தாய், தகப்பனார், உற்றார், உறவினரின்றி தனியாக இருக்கிறான். ஹெர்பர்ட் அவனுடைய ஒன்றுவிட்ட தம்பி (cousin) £14,000 வருமானமுள்ள எஸ்டேட்டிற்குச் சொந்தக்காரன். ஹெர்பர்ட் தாயார் 25 ஆண்டுக்குமுன் முதல் திருமணம் செய்து, கணவன் ஓடிப் போய்விட்டான். போனவன் இறந்துபோன விவரத்தை அறிந்து அவள் மறுமணம் செய்து பிறந்தவன் ஹெர்பர்ட். இறந்து போனதாக நினைத்தவன் 25 வருஷம் கழித்து வந்து ஹெர்பர்ட் தகப்பனாரிடம் "உங்கள் திருமணம் செல்லாது. உங்கள் மனைவியை நான் அழைத்துப் போவேன்" என்று கூறி 2 ஆண்டு பணம் பறிக்கிறான். தகப்பனார் மனம் ஒடிந்து இறந்துவிடுகிறார். விஷயம் வெளிவருகிறது. ஹெர்பர்ட்டிக்கு எஸ்டேட்டில் உரிமையில்லை. உரிமை ஓவனுக்கு. முதல் கணவனுக்கு அதற்கு முன் திருமணத்தில் பிறந்த பையன் ஆப்ரஹாமும், அவன் தகப்பனாரும் சொத்தில் பாதி கொடுத்தால் சமரசம் செய்வதாகக் கூறுகிறார்கள். ஆப்ரஹாம் ஓவனிடம் இது பற்றி பேச வாயெடுத்தவுடன், அவனைத் தூக்கி ஜன்னல் வழியாக ஓவன் எறிகிறான்.

*சட்டப்படி எனக்கு எஸ்டேட் வந்தாலும் நியாயப்படி நான் அதை ஏற்கக்கூடாதுஎன்று ஓவன் எஸ்டேட்டை மறுத்துவிடுகிறான்.*

ஊரும் உலகமும் ஓவனின் பெருந்தன்மையைப் பாராட்டுகிறார்கள். இது எந்த நாட்டில் நடந்தாலும், அப்படி நடப்பவர் ஓரிருவரானாலும் அந்த நாடு பண்பில் முதிர்ச்சியடைந்த நாடாகும்.

ஆப்ரஹாம் தகப்பனாருக்கு ஹெர்பர்ட் தாயாரை மணக்குமுன் வேறொரு திருமணமாக, அம்மனைவி இன்னும் உயிரோடிருப்பது வெளிவந்து ஹெர்பர்ட்டிற்கு எஸ்டேட் திரும்பப் போகிறது.

✡ சட்டப்படி உரிமையில்லாததைக் கேட்பதால் கோர்ட் நிறைய கேஸ் நிரம்பி வழிகிறது.

✡ சட்டப்படி வந்தாலும் தர்ம நியாயப்படி நடக்க வேண்டும்என்பது மனிதப் பண்பின் மகோன்னதச் சிகரம். அவர் மனநிலை அன்பருக்குரிய மனநிலை.

❀❀❀

November 2009 Jiviyam 15 Malar 7
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>(CONCISE TRUISMS)<br>N.Asokan | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
“சுந்தரம்”,
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191